Registered as a News Paper in Ceylon விலை சதம் 15 ★ ★

# ஈழநாடு

THE EELANADU
National Tamil Daily

தபால் பெட்டி எண் : 49
போன் : 389

மலர் 13
இதழ் 22
தேசிய தினசரி

யாழ்ப்பாணம் மாசி 19 முஹறம் 5 புதன்கிழமை (3-3-71)

அருந்துங்கள்!
அண்ணா
கோப்பி
அண்ணா தொழிற்சாலை
இணுவில்

# யாழ்ப்பாண பல்கலைகழகம் பரமேஸ்வராதான்

## சபாநாயகர் ஊர்ஜிதம்

(நமது நிருபர் இ: திருஞானசம்பந்தன்)

தாவடி, செவ்வாய்

வடக்கில் அமையவிருக்கும் பல்கலைக்கழகம் பரமேஸ்வராக் கல்லூரியில் தான் நிறுவப்படுமென்பதை சபாநாயகர் திரு. ஸ்ரான்லி டி சொய்ஸா நேற்று ஊர்ஜிதம் செய்தார் வடபகுதிப்பல்கலைக்கழகம் நல்லூர்த்தொகுதியில் தான் அமையும் என அவர் தெரிவித்தார்.

கோண்டாவில் சைவத் தமிழ்க்கலவன் சாதனபாடசாலையின் புதிய விஞ்ஞான கூடத்தைத் திறந்துவைத்துப்பேசுகையிலே மேற்கண்டவாறு சபாநாயகர் கூறினர்.

தலைமையாசிரியர் திரு. இ. பொ. குமாரசுவாமியின் தலைமையில் நடைபெற்ற இவ்வைபவத்தில் மேலும் பேசிய சபாநாயகர் கூறியதாவது.

இந்நாட்டில் வாழும் சகல இனமக்களும் இனமதபாகுபாடின்றி எங்கும் முன்னேற்றமடைய[...] வேண்டும் என்பதை மனதில்கொண்டு வாழுதல் வேண்டுமென்று பிரதமமந்திரி கூறிய இலட்சியப்பாதையிலே நாமும் செல்வோம்'

இப்பாடசாலை மகாவித்தியாலயமாகத் தரம் உயர்த்தப்பட்டு, இங்கு படிக்கின்ற மாணவர்கள் உயர்கல்வி பெற்று நல்லூர்த்தொகுதியில் அமையவிருக்கும் பல்கலைக்கழகத்திலே பட்டம் பெற்றுத் திகழ்வார்களாக.

யாழ்ப்பாணத்தில்

## சீனித் தட்டுப்பாடு தொடர்கிறது

யாழ்ப்பாணம், புதன்

யாழ்ப்பாணத்தில் பரவலாக எங்கும் சீனித்தட்டுப்பாடு இருந்துவருகிறது. காங்கேசன் துறைப்பகுதி கூட்டுறவுச் சங்கக்கடைகளில் ஒரு கூப்பனுக்கு 3 அவுன்ஸ் வீதம் சீனி வழங்கப்படுகிறதாம்.

யாழ்ப்பாணம் விற்பனவு இலாகாவில் ஆளொன்றுக்கு கால் ரூத்தலும் யாழ்ப்பாணம் கூட்டுறவு ஸ்டோரில் ஒரு ரூத்தலுமாக சீனி பெற முடிகிறது. காலை தொடக்கம் மாலைவரை நீண்ட கியூவை கடைவீதிகளில் காணக்கூடியதாகவே இருக்கிறது.

தீவுப்பகுதியில் அனலைதீவு, நயினாதீவு, நெடுந்தீவு, போன்ற இடங்களில் சீனி மருந்துக்கும் பெறமுடிகிறதில்லையாம். சீனி தாராளமாக மார்க்கட்டில் இருப்பதாக சம்பந்தப்பட்ட அதிகாரிகள் தெரிவித்திருந்த போதிலும் சீனித்தட்டுப்பாடு தொடர்ந்து இருந்து வருகிறது

கடந்த சில தினங்களாக பதுக்கல் காரரைக் கண்டு பிடிப்பதில் உணவுக்கட்டுப்பாட்டு உத்தியோகத்தர்கள் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.

## 'உள்நாட்டிலும்முற்போக்கை ஆதரித்தால் என்ன?'

யாழ்ப்பாணம், புதன்

'கம்யூனிஸ்டுகள் என்பதற்காக இன்று எம்மை மிகவும் கேவலமான முறையிலே தாக்கி வருபவர்கள் கடல் கடந்து சென்று தமிழகத்தில் நடைபெறும் தேர்தலில் கம்யூனிஸ்ட், தி. மு. க. கூட்டணிக்கு வோட்டு வேட்டையாடித் திரும்பியிருக்கிறார்கள்' இது அவர்களிடையே உருவாகிவரும் கருத்து மாற்றத்தைக் காட்டுகிறது '

இவ்வாறு கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த திரு வி' ..ரியரத்தினம் நல்லூர் சோஷலிச படிப்பரங்கு கூட்டத்தில் பேசுகையில் தெரிவித்தார்.

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது: இந்தியப்பிரதமர் இந்திராகாந்தியும் அவரது ஆட்சியும் ஏற்றுள்ள மொழிக் கொள்கைகளையும், பொருளாதாரக் கொள்கைகளையும் தான் இங்கே மக்களாட்சி ஏற்றுச் செயல்புரிந்து வருகிறது. ஆகவே இந்திராவின் ஆட்சிக்கும் அதன் கூட்டணிக் கட்சிகளாகிய திராவிடமுன்னேற்றக்கழகம், கம்யூனிஸ்ட் கட்சிக்கும் ஆதரவாகக் கடல்கடந்து சென்று மேடைப் பேச்சுக்களும், அறிக்கைகளும் கொடுத்தவர்கள் அதே அடிப்படையில் இங்கேயும் ஏன் இயங்கக் கூடாது. வெளிநாடுகளில் இருந்து கொண்டு ஏற்கும் கருத்துக்களை இந்நாட்டிலும் ஏற்றுக் கொண்டால் தமிழர்கள் முன்னேற்றச்சக்திகளின் வெறுப்புக்கு ஆளாகாது பலவழிகளில் பலமுடைய வாய்ப்பிருக்கிறது.

# இந்தியக்குடியரசைப் போல இலங்கையிலும் அமையும்

## மல்லாகத்தில் சபாநாயகர் தகவல்

மாவிட்டபுரம், செவ்வாய்

"வருங்கால சமுதாய சுபீட்சத்தைக் கருதி நாட்டை குடியரசு ஆக்கும் புதிய திட்டங்கள் அமைக்கப்பட்டு வருகிறது. இத்திட்டங்களும், அவற்றுக்கு எதிர்க்கட்சியினர் கொண்டு வந்த திருத்தங்களும் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டுள்ளன. இத்திட்டங்கள் ஆராயபட்டபின் இவ்வருட முடிவுக்குள் இந்திய குடியரசை ஒத்ததான குடியரசு இங்கும் அமைய இருக்கிறது."

இவ்வாறு ஆட்சி மன்ற சபாநாயகர் திரு. ஸ்ரான்லி திலகரத்தின அளவெட்டி மல்லாகம் கிராமசபை ஆதரவில் அமைக்கப்பட்ட சனசமூக நிலைய சமாச கட்டிடத்தை திறந்துவைத்துப் பேசுகையில் கூறினர்.

கூட்டத்துக்குமுன் சபாநாயகர் மாசியப்பிட்டி சந்தியிலிருந்து ஊர்வலமாக அழைத்து வரப்பட்டார். இதையடுத்து சமாசக்கட்டடத்தை சபாநாயகர் சிவப்பு நாடாவை வெட்டித்திறந்து வைத்தார். காங்கேசன்துறை எம் பி எஸ். ஜே.வி செல்வநாயகம் திறந்த வெளியரங்கை திறந்து வைத்தார்.

மல்லாகம் கிராமசபைத் தலைவர் திரு. வி. பொன்னம்பலம் தலைமையில் நடந்த இக்கூட்டத்தில் சபாநாயகர் திரு. திலகரத்தின தொடர்ந்து பேசுகையில் [...]

சேர் பொன் இராமநாதன் இரு இனங்களிடையேயும் ஐக்கியத்தை ஏற்படுத்த முனைந்த கொள்கைகளை இளைஞர்கள் அறிய வேண்டும். நாட்டுக்கும், இனங்களுக்கு இடையில் ஒற்றுமையையேற்படுத்திய சேர். பொன், இராமநாதன் சிங்கள மகன் ஒருவனுடன் போட்டியிட்டு வெற்றிபெற்றார் அவர் அன்று தமிழ் மக்களால் மட்டுமல்ல இலங்கை வாழ் சகல மக்களாலும் போற்றப்பட்டார்.

முன்பு இரு இனங்களுக்கிடையே இருந்துவந்த ஒற்றுமை நாளடைவில் குறைந்து குறைந்து துவேசம் தலைதூக்கியுள்ளது. இந்நிலையில் சிங்கள மக்களும் தமிழ் மக்களுடன் ஒட்டி உறவாடி இனப்பிரச்சனைக்கு தீர்வு காண முயல்கின்றனர். இந்நேரத்தில் பகைமையை விட்டு இரு இனங்களுக்கிடையிலும் ஒற்றுமை வேண்டப்படுகிறது இன்றைய நிலையில் இந்த நாட்டில் பாஷை. பொருளாதாரம் போன்ற பிரச்னைக்கு தீர்வுகண்டு பூரணமான சமுகம் அமையவேண்டும்.

(8ம்பக்கம் பார்க்க)

## "இடமாற்றங்களை ரத்துச்செய்ய வேண்டாம்"

கோட்டை, செவ்வாய்

ஆசிரியர்களுக்கு வழங்கப்படும் இடமாற்ற உத்தரவுகளை ஆசிரிய இடமாற்றச்சபையின் ஆலோசனை இன்றி ரத்துச்செய்ய வேண்டாம் என்று அகில இலங்கை அரசினர் பாடசாலை தமிழர் ஆசிரியசங்க மாற்றச்சபை தூதுக்குழுவொன்று உதவிக்கல்வி அமைச்சர் திரு பி. வை. துடாவவையைப் பேட்டி கண்டு வற்புறுத்தியுள்ளது.

சாக்குப் போக்குக்காரணங்களுக்காக இடமாற்றங்களை ரத்துச்செய்வதினால் இடமாற்றச் சபையினதும், மாவட்ட கல்வி அதிபதிகளினதும் நேரங்கள் விரயமாக்கப்படுவதாகதூதுக்குழு அமைச்சரிடம்சுட்டிக்காட்டியுள்ளது.

சங்கானை, திங்கள்

கடந்த ஒருவாரகாலமாக சங்கானை கிழக்கு மத்திய ப. நோ. கூ. சங்கத்தில் மண்எண்ணெய் விற்பனைக்கில்லை, இதனை வலி-மேற்கு ப. நோ. கூ. ச. சமாசமே விநியோகம் செய்வது வழக்கம் கடந்த கிழமை சமாசத்தில் மண்ணெண்ணெய் விநியோகம்செய்பவர் இல்லையாம் இதனால் பாவனையாளர் கஷ்டத்திற்குள்ளாகின்றனர்.

# கி. பாகிஸ்தானில் பூரண ஹர்த்தால்

## தேசியக்கொடியை எரித்தனர்

டாக்கா, மார்ச். 2

கிழக்குப் பாகிஸ்தான் முழுவதும் இன்று பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது. தேசிய சட்டசபைக் கூட்டத்தை காலவரையறையின்றி ஒத்திவைத்ததைத் தொடர்ந்து அவாமிலீக்கின் தலைவர் சேக் முஜிபுர் ரஹ்மான் விடுத்த வேண்டுகோளை அடுத்து இங்கு ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது.

கிழக்குப் பாகிஸ்தானிலுள்ள கடைகள் தொழிற்சாலைகள் யாவும் மூடப்பட்டிருந்தன. போக்குவரத்துகள் நடைபெறவில்லை-ஆயிரக்கணக்கான மக்கள் வீதிகள் தோறும் ஊர்வலமாகச் சென்றனர். அரசின் தவறான போக்கிற்கு எதிரான கோஷங்களைக் கோஷித்தனர். அவர்கள் பாகிஸ் தேசிய கொடியைக்கொழுத்தினர் டாக்காவிலிருந்து விடப்படும் விமானச்சேவையாவும் ரத்துச் செய்யப்பட்டிருந்தது. தொலை போசித் தொழிலாளர்கள் வெளிநடப்பை தொடர்ந்து டாக்காவுக்கும் வெளியுலகுக்குமிடையேயுள்ள தொடர்புகள் யாவும் ஸ்தம்பித்தன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ராணி சினிமா (யாழ்ப்பாணம்)
தினசரி 3 காட்சிகள்
சிவாஜி கணேஷன் - ஜெயலலிதா
நடித்த
எங்கிருந்தோ வந்தாள்

இப்பொழுது நடைபெறுகிறது
மனோகரா—யாழ்ப்பாணம்
தினசரி 2-30, 6-30, 9-30,
போயா தினங்களில்
நாலு காட்சிகள்
★ காந்தாராவ்
★ தேவிகா
★ பாலையா
★ லலிதா
முதலியோர் நடித்த

சுகுண சுந்தரி

யாழ். வின்ஸர்
தினசரி 4 காட்சிகள்
நடிகர் திலகமும் நாட்டியப் பேரொளியும்
சேர்ந்து நடிக்கும் வண்ணக் காவியம்
ஜெமினியின்
விளையாட்டுப்பிள்ளை
(ஈஸ்மன் கலர்)
மற்றும் நடிகர்கள்
காஞ்சனா, சோ, மனோரமா, பாலையா

7-வது வாரம்
வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
தினசரி 3 காட்சிகள் போயா நாட்கள் 4 காட்சிகள்
கெப்பிட்டல்
(கொழும்பு)
சிவாஜி
காஞ்சனா
எம் என்
நம்பியார்
நாகேஷ்
முத்துராமன்
இன்னும் பலர் நடித்த


சிவந்த மண்

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

**புதன் 3—3—7**

(செய்திகள்: காலை 6-45, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

844 மீ. அன்ட் 61 மீ.

காலை 6-15 நாதாஞ்சலி, 6-25 வைசன நற்சிந்தனை, 6-30 இஸ்லாமிய நற்சிந்தனை, 6-35 அதிப்பாடல்கள், 7-15 மெல்லிசை, 7-45 திரை இசை, 8-00 இசைவேளை, 8-15 இஸ்லாமிய கீதங்கள்.

844 மீ. அன்ட் 49 மீ.

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்பஇசை

844 மீ. அன்ட் 61 மீ.

மாலை 4-30 கல்வி ஒலிபரப்பு — ஜி. சி. ஈ. ஆங்கிலம் தமிழ் மூலம் சிங்களம், 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-30 மாணவர் மன்றம்

இரவு 6-15 இசைப்பயிற்சி 6 30 நாட்டுப்பாடல்கள், 6-40 வீட்டு வைத்தியம், 7-00 வாத்திய இசை, 7-15 வயலின், 7-45 குரலிசை, 8-00 முஸ்லிம்நிகழ்ச்சி, 9-30 நாடகம், 10-00 நேயர் விருப்பம், 10-30 செய்தித் தொகுப்பு

## மாசி உற்சவம்

புங்குடுதீவு செவ்வாய்

புங்குடுதீவு ஸ்ரீ முத்துமாரியம்பாள் ஆலய மாசிமாத உற்சவம் இம்மாதம் 10-ம் திகதிநடைபெறவிருக்கிறது அன்றுமாலை அம்பாள் கிராமம் முழுவதும் ஊர்வலமாகச் செல்லுவார்.

## விரைவில் அரசாங்கம் பொறுப் பேற்கும்

கோட்டை, செவ்

கல்வி மசோதாவை ஆட்சிமன்றம் அங்கீகரித்த பின்னர் தோட்டப் பாடசாலைகளை அரசாங்கம் பொறுப்பேற்கும் எனக் கல்வியமைச்சர் அல்ஹாஜ் பதியுதீன் மாமூத் தெரிவித்துள்ளார்.

கல்வி மசோதா, பல்கலைக்கழக உதவிக் கமிஷன் மசோதா ஆகிய இரண்டும் தற்போது மந்திரிசபையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

நாகம்ஸ் சினிமா
கன்னாகம்
தினசரி 6-30 9-30
போயா நாட்கள் 2-30
ஜெமினி - சரோஜாதேவி
நடித்த
தாமரை நெஞ்சம்

2-வது வாரம்
வெல்லி சினிமா
மானிப்பாய்
தினசரி 2-30, 6-30, 9-30
எ. வி. எம் ராஜன்-சாரதா
நடித்த
துலாபாரம்

ஸ்ரீ காலிங்கன்
இணுவில்
தினசரி 6-30, 9-30
போயா நாட்கள் 2-30
ஜெமினி—பத்மினி
நடித்த
எதிர்காலம்

REGAL Jaffna
Daily 4-45, 7& 9-45 p. m
Poya days 4 shows
Peter O'Toole,
Omar Sharif
in
THE NIGHT OF THE GENERALS
(Panavision-Color)

## அடைவு நகை ஏலவிற்பனவு

யாழ்ப்பாணம் 222, காங்கேசன்துறை வீதி, திரு. கந்தையா பரமு அவர்களிடம் 1-4-67 தொடக்கம் 31-12-68 வரை வைத்த அடைவுநகைகளில் மீட்கப்படாதவை 23-3-71 செவ்வாய்க்கிழமை காலை 10 மணி தொடக்கம் அதேயிடத்தில் வைத்து பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

வி. செ குட்டிப்பிள்ளை
ஏலவிற்பனவாளர்
வண்ணார் பண்ணை.

2797

## விசாரணைக்குழு

கோட்டை. செவ்

1965-ம் ஆண்டு ஜனவரி முதல் 1970-ம் ஆண்டு நவம்பர் வரை அரசாங்க பொறியியல் கூட்டுஸ்தாபனத்தில் நிர்மாணவேலைகள் நிதிவழங்கல் நியமனங்கள் ஆகியவற்றில் நடைபெற்ற சீர்கேடுகள் குறித்து விசாரணை செய்து அறிக்கை சமர்ப்பிக்க விசாரணைக் குழுவொன்றை வீடமைப்பு நிர்மாண அமைச்சர் திரு. பீட்டர் கெனமன் நியமித்துள்ளார்

மேற்படி குழு திரு சாத்முத்தெட்டுவேகம் தலைமையில் இயங்கும்.

## ஆரம்பபாடசாலைகள் அதிகரிக்கும்

கோட்டை, செவ்.

அரசாங்கம் விரைவில் கொழும்பிலும் மற்றும் மாவட்ட தலைநகரங்களிலும் ஆரம்பபாடசாலைகளை நிறுவவிருக்கிறது.

பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளுக்குக் கஷ்டமின்றிச் சுலபமாகக் கல்வி வசதியைப் பெறுவதற்காகவே கல்வியமைச்சு மேற்படி நடவடிக்கையை எடுக்கவுள்ளது.

இப்பாடசாலைகளை நிறுவுவதற்கு வேண்டிய நிலங்களை ஒதுக்குவது குறித்து கல்வியமைச்சு விரிவாக ஆராய்ந்துவருகிறது. இத்தகைய பாடசாலைகள் உடனடியாக நிறுவப்படவேண்டிய சில இடங்களில் அமைச்சு ஏற்கனவே நிலம் ஒதுக்கியுள்ளது.

## உத்தியோகத்தர் கஷ்டம்

யாழ்ப்பாணம், செவ்.

தேசிய வீடமைப்பு யாழ். கிளையில் கடமையாற்றும் ஊழியர்களுக்கு மலசலகூடம் இல்லாமலிருப்பதால் உத்தியோகத்தர்கள் தமது இலாகாவிலிருந்து புதிய அரசாங்கச்செயலகத்திற்கே போகவேண்டியிருக்கிறதாம் இங்கு தொலைபேசி வசதிகூட இல்லையாம்.

## சிரமதானம்

முல்லைத்தீவு, செவ்

முல்லைத்தீவு மகாவித்தியாலயத்தின் புதிய விளையாட்டு மைதானம் கடந்த சில தினங்களாகச் சிரமதான மூலம் செப்பனிடப்படுகின்றது.

## வரிவிளம்பரம்

**விற்பனைக்கு**

உங்களுக்குக் காது கேட்கவில்லையா? காது கேட்க உதவும் கருவி (Hearing Aids) எம்மிடம் இப்பொழுது விற்பனையாகின்றது. சீடில்ஸ் (யாழ்ப்பாணம்) லிமிட்டெட் 122, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். 2868

## அதிபருக்கு பொன்னாடை

யாழ்ப்பாணம், புதன்

கோண்டாவில் இராமகிருஷ்ண மிஷன் வித்தியாலயத்தில் கடந்த பல வருடங்களாக அதிபராகக் கடமையாற்றி ஓய்வுபெற்றுள்ள திரு. ஐ. ஆர். இராமசுவாமியின் சேவையைப் பாராட்டி மேற்படி வித்தியாலய ஆசிரியர், மாணவர், பெற்றோர்கள் இன்று மாலை பிரிவுபசார விழா ஒன்றை நடாத்திப் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கவிருக்கின்றனர்.

திரு சி இரத்தினசிங்கம் ஜே பி தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் நல்லூர் எம் பி திரு சி அருளம்பலம், நல்லூர் வட்டார வித்தியாதரிசி திரு என் ஆர் பாலசிங்கம், இளைப்பாறிய மாவட்ட வைத்திய அதிகாரி டாக்டர் க சிவஞானரத்தினம், வரணி மகாவித்தியாலய அதிபர் திரு செ சிவப்பிரகாசம், அத்தியார் இந்துக் கல்லூரி அதிபர் திரு பி கே இராசரத்தினம் உட்படப் பலர் ஓய்வுபெற்ற அதிபரின் சேவையைப் பாராட்டிப் பேசுவர். இளைப்பாறிய வடபகுதி கல்வியதிபதி திரு வி சங்கரலிங்கம் திரு இராமசாமிக்குப் பொன்னாடை போர்த்துவார் இன்னிசை நிகழ்ச்சியும் இடம்பெறும்

## இன்று மட்டக்களப்பில் ராமகிருஷ்ணர் ஜயந்தி விழா

மட்டக்களப்பு, செவ்வாய்

பகவான் ஸ்ரீராமகிருஷ்ண பரஹம்ஸதேவரின் 136வது ஜெயந்திவிழா இம்மாதம் 3, 4ந் திகதிகளில் கல்லடி உப்போடையில் உள்ள ஸ்ரீராமகிருஷ்ணமிஷன் ஆசிரமத்தில் கொண்டாடப்படவிருக்கிறது.

## உற்பத்தி அதிகரிப்பு

அம்பன், புதன்

கடந்த வருடங்களைவிட இவ்வருடம் வெங்காய விளைச்சல் பன்மடங்கு அதிகரித்துள்ளது. வடமராட்சி கிழக்குப் பகுதியில் பெருந்தொகையான வெங்காயம் இவ்வருடம் செய்கைபண்ணப்பட்டுள்ளது. வடபகுதி விளைபொருள் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சமாசம் முன்னைய ஆண்டுகளைவிட இவ்வாண்டு பெருந்தொகையான வெங்காயத்தை கொழும்புக்கு ஏற்றுமதி செய்துள்ளது.

ராஜா - யாழ்ப்பாணம்
தினசரி 4 காட்சிகள்
★ ஜெய்சங்கர் ★ நிர்மலா
★ முத்துராமன் ★ லெட்சுமி
சுந்தரராஜன் – நாகேஷ் - வி, கே ராமசாமி
மற்றும்பலர் திறம்பட நடித்த
சிறந்த ஹாஸ்ய சித்திரம்
வீட்டுக்கு வீடு
(எஸ். பி. ஆர். பிலிம்ஸ் வெளியீடு)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேசிய சட்டசபை ஒத்திவைப்பை எதிர்த்து

# கி. பாகிஸ்தானில் ஹர்த்தால் அனுஷ்டிக்க வேண்டுமாம்

## ரஹ்மான் வேண்டுகோள்

டாக்கா, மார்ச் 2

**புதன்கிழமை கூடவிருந்த பாகிஸ்தான் தேசிய சட்டசபை ஒத்திவைக்கப்பட்டதை எதிர்த்து கிழக்குப் பாகிஸ்தானில் இன்றும் நாளையும் ஹர்த்தால் அனுஷ்டிக்குமாறு அவாமி லீக் தலைவர் சேக் முஜிபுர் ரஹ்மான் வேண்டுகோள் விடுத்துள்ளார்.**

கிழக்குப் பாகிஸ்தான் கவர்னர் பதவியிலிருந்து நீக்கப்பட்டு, ஐந்து ராணுவ ஜெனரல்களை கொண்ட சபை அமைக்கப்பட்டுள்ளது.

தேசிய சட்டசபை. ஒத்திவைப்பு, ஹர்த்தால் மற்றும் தேசவிரோதம் சம்பந்தமான பேச்சுக்களைப் பிரசுரித்தால் ராணுவச் சட்டத்தின்கீழ் பத்திரிகைகள் தண்டிக்கப்படும்.

புதன்கிழமை கூடவிருந்த பாகிஸ்தான் தேசிய சட்டசபைக் கூட்டத்தை ஜனாதிபதி யாஹ்யாகான் ஒத்திவைத்ததற்கு ஆட்சேபம் தெரிவிக்கும்வகையில் கிழக்குப்பாகிஸ்தான் முழுவதும் இன்றும், நாளையும் பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கும்படி அவாமி லீக் தலைவர் சேக் முஜிபுர் ரஹ்மான் மக்களையும் அரசியல் கட்சித் தலைவர்களையும் கேட்டுக் கொண்டுள்ளார்

தேசிய சட்டசபை ஒத்திவைத்ததை மக்கள் கட்சித் தலைவர் சுல்பிகார் அலி பூட்டோ வரவேற்றுள்ளார். இதற்கு முன் தேசிய சட்டசபையை ஒத்திப்போடுமாறு இவர் கேட்டிருந்தார். இவரது கருத்துக்கு ஆதரவாகவே தேசிய சட்டசபையை ஜனாதிபதி யாஹ்யாகான் ஒத்திப்போட்டார் என அரசியல் வட்டாரங்களில் பேசப்படுகிறது

ஆனால் மக்கள் கட்சியையும் பாகிஸ்தான் முஸ்லிம் லீக்கின் ஒரு பகுதியையும் தவிர ஏனைய பாகிஸ்தான் கட்சிகள் தேசிய சட்டசபைக் கூட்டம் ஒத்திவைத்தமைக்கு கண்டனம் தெரிவித்துள்ளன.

கிழக்குப் பாகிஸ்தான் தலைநகரான டாக்காவில் பதட்டநிலைமை நிலவுவதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதேநேரத்தில் தேசிய சட்டசபை ஒத்திவைத்ததை அவாமி லீக் தலைவர் சேக் முஜிபுர் ரஹ்மான் பலமாகக் கண்டித்துள்ளார். பாகிஸ்தானில் ஜனநாயகம் ஏற்படாமல் இருப்பதற்கு பூட்டோதான் காரணம் இந்த அதிகாரவெறியை அடக்கியே தீருவேன். தேசிய சட்டசபையில் மக்கள் கட்சி இரண்டாவ திடத்தையே வகிக்கிறது. அதுஒரு சிறுபான்மைக்கட்சி தேசியசட்ட சபைஒத்திவைப்பு திடீரென ஏற்பட்ட ஒன்றல்ல நீண்டநாள் திட்டமிட்டுச் செய்த செயலாகும் என்று அவர் சொன்னார்.

கிழக்குப்பாகிஸ்தான் கவர்னராக இருந்த கடற்படைத் தளபதியை பதவியிலிருந்து ஜனாதிபதி நீக்கியுள்ளார். கவர்னரின் அண்மைக்காலப் பேச்சுக்கள் காரணமாகவே அவர் பதவியிலிருந்து நீக்கப்பட்டதாகத் தெரிகிறது. இவர் பதவியிலிருந்து நீக்கப்பட்ட பொழுதிலும்கூட கிழக்குப் பாகிஸ்தான் ராணுவச்சட்ட நிர்வாகியாகத் தொடர்ந்தும் இருப்பார் கவர்னருக்குப்பதிலாக ஐந்து ராணுவ ஜெனரல்களைக் கொண்ட குழுவொன்றை ஜனாதிபதி நியமித்துள்ளார்

நாட்டில் இப்பொழுது இருக்கும் வேற்றுமைகளைப் பெரிதுபடுத்தும்வகையிலோ அல்லது தேசிய சட்டசபை ஒத்திவைப்புப் பற்றியோ அரசுக்கு எதிரான செய்திகளை வெளியிட்டார். ராணுவச் சட்டத்தின்கீழ் பத்திரிகைகள் தண்டிக்கப்படுமென ஜனாதிபதியினால் வெளியிடப்பட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### மாணவர் ஆர்ப்பாட்டம்

தேசிய சட்டசபை ஒத்திவைக்கப்பட்டதை கிழக்குப் பாகிஸ்தானிலுள்ள பெரும்பாலான பல்கலைக்கழக மாணவர்கள் எதிர்த்துள்ளனர். சில இடங்களில் வன்முறைச் சம்பவங்கள் நிகழ்ந்திருப்பதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

---

## வர்த்தகர்களுக்கு ஆலோசனை கூறும் கம்யூட்டர் இயந்திரம்

லண்டன், மார்ச் 2

இலங்கை உட்பட, உலகின் எப்பாகத்தில் இருப்பவரும் பிரிட்டனுடன் வர்த்தக, கைத்தொழில் சம்பந்தப்பட்ட தகவல்களைப் பெறவிரும்பினால் அதிசக்திவாய்ந்த கம்யூட்டர் ஒன்று அவருக்கு உதவ எச்சமயமும் ஆயத்தமாக இருக்கிறது. இலவசமாக அளிக்கப்படும் இச்சேவைக்கு முதுகெலும்பாக இருப்பது வெளிநாட்டு சாம்ராஜ்ய வர்த்தக குழுக்களாகும்.

பிரிட்டனின், வர்த்தக கைத்தொழில் இலாகாவினால் நியமிக்கப்பட்ட இக்குழுக்கள் உலகின் பலபாகங்களிலும் இருக்கும் பிரிட்டிஷ் தூதுவராலயங்களின் ஓர் அங்கமாக இருந்து பணிபுரிகின்றன. தாம் பணிபுரியும் நாடுகளின், தனியார் வர்த்தக. கைத்தொழில், அரசாங்க வர்த்தக கைத்தொழில்துறையினருடன் நெருங்கிய தொடர்பு கொண்டு அவர்களின் வர்த்தகரீதியான விசாரணைகளையும், தேவைகளையும் அறிந்து பிரிட்டனிலுள்ள கம்யூட்டருக்கு அனுப்பி வைப்பது இக் குழுக்களின் முக்கிய கடமையாகும்.

வெளிநாடுகளில் வர்த்தகம்செய்யவிரும்பும் பிரிட்டிஷ் கம்பனிகள் தாம் அளிக்ககூடிய. அளிக்க விரும்பும் சேவைகள் பற்றிய சகல விரிவான தகவல்களையும் இக் கம்யூட்டரிடம் ஏற்கனவே பதிவுசெய்துள்ளன. கம்யூட்டர் தன்னிடம் அளிக்கப்பட்ட தகவல்களைத் தனித்தனியே விசேஷ அட்டைகளில் பொறித்துவைத்துக் கொள்கிறது

வெளிநாடுகளில் பணிபுரியும் வர்த்தகக் குழுக்கள், அந்நாடுகளின் தேவைகளையும், விசாரணைகளையும் இக் கம்யூட்டருக்கு அனுப்பியவுடன், அது கம்பனிகள் அளிக்ககூடிய சேவைகளையும், கேட்கப்பட்டிருக்கும் சேவைகளையும், ஒப்பிட்டு. தேவையைப் பூர்த்திசெய்யக்கூடிய ஒரு கம்பனியைத் தானே தேர்ந்தெடுத்து அவ்விசாரணையை அல்லது தகவலை உடனடியாக அனுப்பிவைத்து விடுகிறது. இதன்பின் குறிப்பிட்ட கம்பெனி, நேரடியாக, வெளிநாட்டு வர்த்தகருடன் தொடர்புகொண்டு தம் வியாபாரத்தை சுமுகமாக இலகுவாக காலதாமதமின்றிச் செய்துகொள்ளலாம்.

பிரிட்டனுடன் வியாபார வர்த்தகத் தொடர்புகளை ஏற்படுத்திக்கொள்ள விரும்பும் எந்த வெளிநாட்டினரும் செய்யவேண்டியதெல்லாம், அந்தந்த நாட்டில் உள்ள பிரிட்டிஷ் தூதுவராலயத்தின் வர்த்தகக் குழுக்களுடன் தொடர்பு கொள்வதுதான். இதற்குமேல் வேண்டிய சகல வேலைகளையும் இந்நவீன கம்யூட்டர் செய்துவிடும்.

---

# இந்தியப் பொதுத்தேர்தல் அமைதியாக நடைபெற்றது

## சில இடங்களில் அசம்பாவிதம்

## இருவர் பலி; 17 பேர் காயம்

புதுடில்லி, மார்ச் 2

இந்தியாவின் 6-வது பொதுத்தேர்தலின் முதலாவது சுற்று வாக்களிப்பு மிக அமைதியாகவும் ஒழுங்காகவும் நடைபெற்றதாக அறிவிக்கப்பட்டுள்ளது. பீகார், உத்தரப்பிரதேஷ், குஜராத் தமிழ்நாடு ஆகிய நான்கு மாநிலங்களில் சில அசம்பாவிதங்கள் நடைபெற்றுள்ளன. மற்ற ஐந்து மாநிலங்களிலும் இரு யூனியன் பிரதேசங்களிலும் தேர்தல் மிக அமைதியாக நடைபெற்றது. பொதுவாக 50க்கும் 60க்குமிடைப்பட்ட வீதமானோர் வாக்களித்திருக்கின்றனர்.

இந்தியாவின் புதியமாநிலமான ஹிமாலயப்பிரதேசத்தில் முதல் முதலாக லோக்சபைத் தேர்தல் நடைபெற்றது இப்பகுதி யூனியன் எல்லையோரமாக இருந்த பொழுது 6 பிரதிநிதிகள் நியமிக்கப்பட்டிருந்தனர் ஆனால் இப்பிரதேசம் புதிய மாநிலமாகச் சேர்க்கப்பட்டபின்பு லோகசபைக்கு 4 தொகுதிகளாகக் குறைக்கப்பட்டது. முதல்முறையாக 7 லட்சத்திற்கும் கூடுதலான மக்கள் வாக்களித்தனர்.

### அசம்பாவிதங்கள்

தமிழ்நாட்டில் இரு கட்சிகளுக்கிடையே நடைபெற்ற கைகலப்பில் ஒருவர் இறந்து போனதாகவும் பலர் காயமடைந்ததாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. குஜராத்தில் உள்ள சூரத் என்னும் பகுதியில் ஒருவர் கத்தியால் குத்தப்பட்டு கொலைசெய்யப்பட்டார்.

### தமிழ்நாடு

தமிழ்நாட்டின் முதல்கட்ட வாக்களிப்பில் அநேகர்பங்கு கொண்டனர். வாக்களிப்பு ஒழுங்காகவும் அமைதியாகவும் நடைபெற்றது. கன்னியாகுமரி, திருநெல்வேலி ஆகிய பகுதிகளில் மழை பெய்தபோதிலும், அதைப் பொருட்படுத்தாமல் மக்கள் பெருவாரியாகச் சென்று வாக்களித்தனர்.

### சென்னையில்

சென்னையில் வாக்களிப்பு மிகவும் சுறுசுறுப்பாக நடைபெற்றது. பெரும்பாலும் பெண்களே வாக்குச்சாவடிகளில் அதிகமாகக் காணப்பட்டனர். வாக்களிப்பில் ஆள்மாறாட்டம்செய்த இருவரைப் பொலிசார் கைது செய்தனர். தமிழ்நாடு முதலமைச்சர் மு. கருணாநிதி போட்டியிடும் சைதாப்பேட்டைத் தொகுதியில்தான் அதிகமான வாக்காளர் தங்கள் வாக்கைப் பதிவுசெய்தனர்.

### ராஜாஜி

சுதந்திரக்கட்சித் தலைவரும், முதுபெரும் ராஜதந்திரியுமான ராஜாஜி தான் வாழும் பகுதியான கீழ்ப்பாக்கம் வாக்குச் சாவடிக்கு முதலில் சென்று தனது வாக்கைப்போட்டார்.

பெரும்பாலான முஸ்லிம் பெண்கள்முகத்திரை அணிந்தவர்களாய் வாக்களிப்புநிலையங்களில் காணப்பட்டனர்.

### மே.வங்காளம்

மேற்குவங்காளத்தில் தேர்தல் நடத்துவதற்கு ஒழுங்கு செய்வதற்காக இந்தியத் தேர்தல் கமிஷனர் திரு. சென்வர்மா ஞாயிற்றுக்கிழமை கல்கத்தா செல்லவிருக்கிறார்.

அங்கு வேண்டிய பாதுகாப்பு ஏற்பாடுகளை அரசாங்க அதிகாரிகளும், அரசாங்கத்துறைகளைச் சேராத மற்றும் அதிகாரிகளும் சேர்ந்து பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்வரெனத் தெரிவித்த சென்வர்மா, மத்திய உள்துறைக் காரியதரிசியும், இராணுவத் தளபதியும் கல்கத்தாவிற்குச் செல்லவிருப்பதற்கும் தான் செல்வதற்கும் எதுவிததொடர்புமில்லைஎன்றார்.

---

### பாராட்டு அளிப்பர்

மாவிட்டபுரம். செவ்

அண்மையில் இளைப்பாறிய வடமாநிலக் கல்வி அதிபதி திரு. வெ. சங்கரலிங்கத்தின் சேவையைப் பாராட்டி இம்மாதம் 4-ம் திகதி அகில இலங்கை அரசினர் பாடசாலைத் தமிழ் ஆசிரியர்சங்க வடமாநில கிளைகளின் கூட்டுச்சபை விழா நடத்த இருக்கிறது.

யாழ், சிங்கள மகாவித்தியாலயத்தில் கூட்டுச்சபைத் தலைவர் திரு வ மகாலிங்கம் தலைமையில் நடைபெறும் இப்பாராட்டு விழாவில் பிரதமவிருந்தினராக வடமாநிலக் கல்வி அதிபதி திரு டபிள்யூ டி சி மகாதந்தில கலந்து சிறப்புரைவழங்குவார்.

வடமாநில பிரதமர்கல்வி அதிகாரி திரு அ சந்திரசேகரம்பிள்ளை வவுனியா மாவட்ட பிரதம கல்வி அதிகாரி திரு தி மாணிக்கவாசகர், மன்னார் மாவட்ட பிரதம கல்வி அதிகாரி திரு கனகசபாபதி உட்பட திரு செ சிவப்பிரகாசம், திரு ந பாலசுப்பிரமணியம் ஆகியோர் பாராட்டுரை வழங்குவார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மணிவாக்கு**

எப்பொழுதும் பின்புறத்தை நோக்குபவர்கள் முன்னேறமுடியாது. — ஜவஹர்லால்நேரு.

ஈழநாடு
Eelanadu National Tamil Daily
Telegrams; "EELANADU" Jaffna
Post Box: 49 Jaffna Telephone: 389

யாழ்ப்பாணம் சாதாரண வருஷம் மாசி மாதம் 19ந் திகதி (3-3-71

## நம்நாட்டு கலைஞர்கள்

பல லட்சக் ரூபாய் செலவில் மேற்கொள்ளப்படவிருக்கும் நெடுஞ்சாலை அபிவிருத்தித் திட்டத்துக்கு வெளிநாட்டு ஆலோசகர்களின் பணிகளையும் பெற்றுக் கொள்ள வேண்டும் என்று உலகவங்கி தெரிவித்த நிபந்தனைக்கு இணங்க நீர்ப்பாசன மின்விசை நெடுஞ்சாலைகள் அமைச்சர் திரு. மைத்திரிபாலசேனநாயகா மறுத்துவிட்டதாக ஒரு செய்தி கூறுகின்றது. கூடியவரையில் உள்நாட்டுப் பொறிஞர்களையே பயன்படுத்திக்கொள்வது தான் அரசாங்கத்தின் கொள்கையென்றும், விசேஷ சந்தர்ப்பங்களில் மாத்திரம் வெளிநிபுணர்களின் ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்ளும் உரிமை அரசுக்கு இருக்கவேண்டும் என்றும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

பலதுறைகளிலும் பட்டம் பெற்ற அநேக இளைஞர்கள் இன்று நம் நாட்டில் வேலையற்றவர்களாய் இருந்து வருகிறார்கள். திறமையுள்ள பல நிபுணர்களுக்கு வாய்ப்பும் வசதியும் கிடைக்காமலிருப்பதாகக் கூறப்படுகின்றது. இதனால் இவர்கள் வெளிநாடுகளில் கிடைக்கும் வாய்ப்புக்களைப் பயன்படுத்திக்கொள்ள முயற்சி எடுப்பது ஆச்சரியமல்ல. நம் நாட்டின் அபிவிருத்திவேலைகளில் இவர்களைத் தக்க முறையில் பயன்படுத்திக் கொள்ளவேண்டியது அரசின் கடமை,

வெளிநாட்டு நிபுணர்களின் ஆலோசனைகளை முற்றாக வேஅமைச்சர் நிராகரித்துவிடவில்லையென்பதையும் கவனிக்கவேண்டும். இதனை ஒரு நிபந்தனையாக உலகவங்கி விதிப்பதையே அவர் விரும்பவில்லை.

வெளிநிபுணர்களின் உதவியை நாடுவது ஒரு புறமிருக்க நம்நாட்டு நிபுணர்கள் வெளியேறிவிடாமல் தடுப்பது அரசுக்குரிய பெரும் பொறுப்பாகும்.

எனவே இதற்கான அடிப்படைக் காரணம் இன்னது தான் என்பதை ஆராய்ந்து அறிந்து பரிகாரம் காணவேண்டும்

சாதாரணத் தொழில் வாய்ப்புக்களில்கூட இனமொழி பாகுபாடுகள் தலைதூக்குவதாக புகார் இருந்துவருவது பகிரங்கமான விஷயம்.

மக்களில் ஒரு பகுதியினர் எப்பொழுதுமே அதிருப்தியுற்றவர்களாய் இருந்து வருவதும், இன்னொரு பகுதியினர் மாத்திரம் அரசாங்க சலுகை வசதிகளைப் பெரிய அளவில் பயன்படுத்திக்கொள்வதுமான நிலைமை நாட்டில் பூசல்களுக்குத்தான் இடம் கொடுத்துக்கொண்டிருக்கும் இம்மாதிரியான நிலைமை அறிஞர்கள், நிபுணர்கள், பட்டதாரிகள் விஷயத்திலும் தலைதூக்காமலிருக்கவேண்டும்

இனமொழி பேதமற்ற முறையில் வசதியும் வாய்ப்பும், போதிய வருமானமும் கிடைக்குமானல் இவர்கள் தேசப்பற்றுடன் நாட்டின் வளர்ச்சியிலும் அபிவிருத்திப்பணிகளிலும் மிக அக்கறையுடன் ஈடுபடுவார்களென்பதில் சந்தேகமில்லை.

மேலும் வெளிநாடுகளுக்கு அவ்வப்போது சென்று அவசியமானபயிற்சிகளைப் பெறவும் அந்நாடுகளின் அபிவிருத்திகளைக் கண்டறிந்து வரவும் இவர்களுக்கு வாய்ப்பிருக்கவேண்டும். இவ்வாறு கிடைக்கும் அறிவை அவர்கள் நம்நாட்டுக்கு ஏற்றவகையில் பயன்படுத்த முடியும். இதன் மூலம் வெளிநாட்டு நிபுணர்கள் தயவை நாம் அடிக்கடி நாடிச்செல்ல வேண்டிய அவசியமே ஏற்படாது.

## "ஆசிரியர்களை அடிக்கடி மாற்றுவதால் கல்வி பாதிக்கப்படுகிறது"

சுழிபுரம், செவ்வாய் "ஆசிரியர்களை அடிக்கடி மாற்றுவதால் பாடசாலையின் கல்வித்தரம் பாதிப்பதுடன், மாணவர்களிடையே கல்வியைக் கற்கும் முறையும் பெரும் குழப்பத்தில் முடிவடைந்துவிடும். மாணவர்களின் கல்வி வளர்ச்சி ஆசிரியர்களினதும் பெற்றோர்களினதும் கையிலேயே தங்கியுள்ளது. பாடசாலைக்கு வேண்டிய சகல தேவைகளையும் பெற்றோர்-ஆசிரியர் சங்கம் பெற முன்வரவேண்டும். பெயரளவில் மட்டும் இயங்காமல், சங்கம் செயலளவில் பணியாற்றவேண்டும்.

இவ்வாறு பண்ணாகம்மெய்கண்டான் மகாவித்தியாலய பெற்றோர்-ஆசிரியர் சங்கப் பொதுக்கூட்டத்தில் கலந்து உரையாற்றிய வட்டுக்கோட்டைத் தொகுதி முன்னாள் ஆட்சிமன்ற உறுப்பினர் திரு அ. அமிர்தலிங்கம் குறிப்பிட்டார். மகா வித்தியாலய அதிபர் திருமதி ப சிவானந்தராசன் தலைமையில் கூட்டம் நடைபெற்றது.

சங்கத்தின் புதுவருட உத்தியோகத்தர்களாகப் பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவர் திருமதி ப சிவானந்தராசன், உப-தலைவர்கள் திருவாளர்கள் செ. ஸ்ரீநிவாசன். செ. சம்பந்தமூர்த்தி, செயலாளர் பண்டிதர் க ஆறுமுகம், தனாதிகாரி திரு வி. மகாலிங்கம் நிர்வாக சபை உறுப்பினரும் தெரிவுசெய்யப்பட்டனர்.

......

### பாராட்டு

சுழிபுரம், செவ்வாய் தமிழ்த் தலைவர்களுக்கிடையே வல்வையில் ஏற்பட்ட ஒற்றுமையைப் பாராட்டி சித்தன்கேணி இளைஞர் முன்னேற்றக்கழகத்தினர் தீர்மானம் நிறைவேற்றினர்.

# மாவட்ட கூட்டுஸ்தா

# கைத்தொழில் வளர்ச்சி சுபீட்சத்துக்கும் உத

விவசாயத்திலும் பார்க்க கைத் தொழிலாக்கத்தால்தான் நாடு பொருளாதார சுபீட்சமடைய முடியும். இதற்கு இன்று உலகின் இரு பெரும் வல்லரசுகளாகிய அமெரிக்காவும், ருஷ்யாவும் சிறந்த எடுத்துக்காட்டாக விளங்குகின்றன, இவ்விரு நாடுகளும் இன்று உலகில் முன்னணியில் நிற்பதற்கு கைத்தொழிற்துறையில் மற்றைய உலக நாடுகளிலும் பார்க்க முன்னேறியுள்ளமையே காரணமாகும்.

### சிறுகைத்தொழில் அபிவிருத்தி

இன்று நமது நாடும் மேற்கத்திய நாடுகள் போன்று கைத்தொழில் ஆக்கத்தின் முக்கியத்துவத்தையுணர்ந்துள்ளது. மேற்கத்தியநாடுகளின் கனிவளம் போன்று நம்நாட்டின் கனிப்பொருள் வளம் இல்லாதிருப்பினும் கிடைக்கக் கூடிய குறைந்த கனிப் பொருள்வளத்தைப் பயன்படுத்தி வருகிறது. மேலும் பயன் படுத்த முயற்சிகள் எடுக்கப்படுகின்றன. இன்றைய எமது பொருளாதார சமூக அரசியல் சூழ்நிலையில் சிறு கைத்தொழில்களை குறைந்த மூலதனத்துடனும் மூலப் பொருளுடனும் விருத்தி செய்வதே பொருத்தமுடையதாகும் என்பதை மக்கள் அரசாங்கம் உணர்ந்து சிறுகைத்தொழில் அபிவிருத்திக்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

### நாட்டின் முதுகெலும்பு

கிராமங்களே ஒரு நாட்டின் முதுகெலும்பாகும். ஒவ்வொரு கிராமத்திலும் சிறுகைத்தொழில்களை அபிவிருத்தி செய்வதன் மூலமே நாம் பொருளாதார சுதந்திரத்தையடையலாம். மக்கள் அரசாங்கம் இதையுணர்ந்து கிராமங்களில் சிறுகைத்தொழில்களை நிறுவ திட்டங்கள் தயாரித்துள்ளது. நிதி ஒதுக்கியுள்ளது. இது வரவேற்கத் தக்க தொன்றாகும். எனினும் அரசாங்கம்கிராமங்களில் கைத்தொழில் ஆக்கத்துக்கான நிறுவனங்கள் இல்லாமையை உணரவில்லையென்றே நாம் கொள்ள வேண்டும். உற்பத்திநிறுவனம், உற்பத்திப் பிரிவு ஆகியன ஒவ்வொரு பிரிவிலும் இருக்க வேண்டும். கிராமபொருளாதாரத்தின் முன்னேற்றமின்மைக்கு இத்தகைய நிறுவனமின்மை ஒருகுறைபாடாகவே இன்றுவரை விளங்குகிறது.

### அரசாங்க நிறுவனம்

கிராமங்களில் சிறுகைத்தொழில்களை அபிவிருத்தி செய்ய முனையும் போது நாம் சிறுகைத்தொழில் பூரணமாகத் தனியார் வசம் ஒப்படைப்பதா? அரசாங்கம் கிராமங்களில் சிறுகைத்தொழில்களை நிறுவுவதற்கன நிறுவனத்தை நிறுவப்போகிறதா? இத்தகையதொரு அரசாங்க நிறுவனம் மாவட்டம் தோறும் இல்லாவிடில் கிராம மக்களிடையே சிறுகைத் தொழில் அபிவிருத்தியை நாம் எதிர்பார்க்கவியலாது.

எமது நாடு மேலைநாடுகள் போன்று செல்வச் செழிப்புள்ளதல்ல. எனவே ஒரு சாதாரண தொழிலாளி பெரிய அல்லது சிறிய கைத்தொழிலைச் சுயமாக நிறுவவியலாது அரசாங்கம் வங்கிக் கடனை வழங்கினலும் அதனுல் சாதாரண தொழிலாளி பெரிதும் பயனடையவியலாது. சுருக்கமாகக் கூறின் எமது கிராமிய பொருளாதாரம் இன்று முதலாளிகள், தரகர்கள், கொந்தராத்துக்காரர்கள் ஆகியோரது கைகளிலேயே தங்கியுள்ளது. இதனுல் ஒரு தொழிலாளி தனது வேலைக் [illegible] வதில்லை. எனவே உண்மையில் ஒவ்வொரு தொழிலாளியும் பயன் பெற்று இன்புற்று வாழவேண்டுமானல் இந்த தரகர்கள் கொந்தராத்துக் காரர்கள் போன்ற முதலாளிகளது ஆதிக்கம் மறைய வேண்டும். அதற்கு இவர்களது இடத்தில் எமக்கு ஒரு அரசாங்க நிறுவனம் அத்தியாவசியமாகும். இத்தகைய தொரு அரசாங்க நிறுவனத்தினுல்தான் கிராமங்களில் சிறுகைத்தொழில்கள் துரித வளர்சியடைந்து நாட்டின் பொருளாதார சுதந்திரத்துக்கு அடிகோல முடியும்.

### மாவட்டகூட்டு ஸ்தாபனங்கள்

இன்று மக்கள் அரசாங்கம் மாவட்ட ரீதியில் நியமனங்கள் அபிவிருத்திகள் ஆகியவற்றைக் கவனித்து வருகிறது இதே போன்று கிராமங்களில் சிறுகைத்தொழில்களை அபிவிருத்தி செய்ய மாவட்ட ரீதியில் கூட்டுஸ்தாபனங்களை நிறுவவேண்டும் இவ்வாறு மாவட்ட கூட்டு ஸ்தாபனங்களை நிறுவுவதனுல் கைத்தொழில் வளர்ச்சிக்கு அரசாங்க நிறுவனம் இல்லாத குறைபாடு நிவிர்த்தியாகும்.

இந்த மாவட்ட கூட்டுஸ்தாபனங்கள் தங்கள் தங்கள் மாவட்டத்தில் உள்ள சூழலைக் கொண்டு அங்கு என்னென்ன மூலப் பொருள்கள் உள்ளன. அவற்றைக் கொண்டு என்னென்னகைத்தொழில்கள் நிறுவலாம் என்பவற்றை பற்றி சிறு திட்டங்கள் தீட்டவும் அச்சிறு திட்டங்களை இலகுவாகச் செயல் படுத்தவும் வாய்ப்பாகவிருக்கும். அத்துடன் அம்மாவட்ட மனித சக்தியைப் பயன்படுத்தவும் அவர்களுக்கு இச்சிறு கைத்தொழில் மூலம் வேலைவாய்ப்பளிக்கவும் முடியும். இது மட்டுமன்றி தற்போதுள்ள மத்திய சிறுகைத்தொழில் கூட்டுஸ்தாபனத்துடன் தொடர்புகொண்டு அதற்கு ஒத்துழைப்பு நல்கவும், நாட்டின் இதர மாவட்ட உற்பத்தி, சந்தைப் படுத்தல் தொழில்களுடன் நெருங்கிய தொடர்புகொண்டு பண்டமாற்றுகள் செய்துகொள்ளவும் இத்தகைய மாவட்ட கூட்டுஸ்தாபனங்கள் உதவுவனவாக அமையும்,

### பிறநிறுவனங்கள் சக்தியற்றவை

கிராமப்பகுதிகளில் மேற்படி அலுவல்களைக்கவனிக்க கிராமரீதியில்கூட்டுறவு நிறுவனங்கள் இருக்கின்றன எனச்சிலர்கருதலாம்' ஆனல் இக்கூட்டுறவு நிறுவனங்கள் மேபடி அலுவல்களை துரிதமாகக் கவனிக்கக்கூடியசக்தி வாய்ந்தவைகளல்ல, கிராம கைத்தொழிலாக்கம். வேலைவாய்ப்பளித்தல் போன்ற தேசிய பிரச்சனைகளை கூட்டுறவுநிறுவனங்களால் தீர்த்து வைக்கமுடியாது- புதிதாக அரசாங்கத்தால் நிறுவப்படவிருக்கும் கூட்டுறவு நிறுவனங்களும் வர்த்தகத்திலும், விவசாயத்திலும் கூடிய கவனம் செலுத்த உள்ளனவேயன்றி கைத்தொழில்ஆக்கத்திலல்ல.

மேலும்நாட்டின் பலபிரிவுகளிலும் நிறுவப்படும் மாவட்ட அபிவிருத்திக் குழுக்களும் திட்டமிடும், ஆலோசனைக் குழுக்களாகவேயுள்ளன இக்குழுக்களுக்கு குறிப்பாக கைத்தொழில் ஆக்கத்தில் கூடிய அதிகாரம் இல்லை.

சோஷலிச நாடுகள் பலவற்றில் கைத்தொழில் கூட்டுஸ்தாபனங்கள், கைத்தொழில் கூட்டுறவு நிறுவனங்கள் நடாத்தும் தொழிற்சாலைகள் ஆகியன உள்ளன. இவற்ருல் இச் சோஷலிச நாடுகள் பெரிதும் முன்னேற்றமடைந்துள்ளன.

### பல்வேறு சிறு கைத்தொழில்கள்

இத்தகைய கூட்டுத்தாபனங்களை நமது நாட்டிலும் மாவட்டங்கள்தோறும் நிறுவினுல் நாட்டுக்குத் தேவையான யாவனைப்பொருட்கள் யாவற்றையும் உற்பத்தி செய்துவிடலாம். அரசாங்க இலாகாக்கள், கூட்டுத்தாபனங்கள் மற்றும் நிறுவனங்கள் ஆகியவற்றிற்கு இப்பொருட்களை விநியோகிக்க முடியும். இந்தப்பொருட்களை இந்நிறுவனங்கள் நாட்டின் தேவைக்கெடுத்துக் கொண்டு மிகுதியை வெளிநாடுகளுக்குஏற்றுமதிசெய்து அந்நியசெலாவணியை பெற்றுக்கொள்ளலாம். சவர்க்காரம், உடுப்புகள், செருப்புகள்,போத்தல்களில் அடைக்கப்பட்ட பானங்கள் மற்றும் தயாரித்த உணவுவகைகள் போன்றவற்றைகூட பெற இக்கூட்டுத்தாபனங்கள் வழிவகுக்கும். இவைமட்டுமன்றி கட்டிடத்துக்குத்தேவையான மரங்கள். உலோகப் பொருட்கள், ஓலைகள் ஓடுகள், சுண்ணக்கற்கள் முதலியவற்றையும் இம்மாவட்டக்கூட்டுத்தாபனங்கள் தரவல்லன.

இவற்றைவிட மற்றும் தென்னை, பனை, புல்முதலியவற்றை மூலப்பொருளாகக் கொண்ட பல சிறுகைத்தொழில்களையும், தச்சுவேலை மட்பாண்டம் வனைதல், செங்கட்டி உற்பத்தி முதலிய பல்வேறு சிறு கைத்தொழில்களையும் மேற்படி கூட்டுத்தாபனத்தால் அதிகரிக்கவும் அபிவிருத்தி செய்யவும் முடியும். தனியார் சிறுகைத்தொழிலாளர்களும்தங்களுக்குத் தேவையான மூலப் பொருட்களை இக் கூட்டுத்தாபனங்களின்மூலம் பெற்றுக்கொள்ள வசதியாகவிருக்கும்.

### நாட்டுக்கு நன்மை பயப்பது

மாவட்ட கூட்டுத்தாபனங்கள் மாவட்டத்தை மட்டும் அபிவிருத்தி செய்வதோடு அமையாது அரசாங்கம்மேற்கொள்ளும் விவசாயம், நீர்ப்பாசனம், கட்டிடம், வீதி, பாலம் அமைத்தல், மின்சக்தி விஸ்தரிப்பு போன்ற இன்னோரன்ன வேலைகளிலும் உதவி செய்யக்கூடியதாக விருக்கும். ஒவ்வொரு மாவட்டத்திலும் அரசாங்கம் மேற்கொள்ளும் மேற்படிவேலைகளுக்கு உதவிசெய்வதால் அப்பகுதியின் சிறுகைத்தொழில்களின் வளர்ச்சியும் மறைமுகமாக அபிவிருத்தியடைய ஏதுவாகிறது.

நாட்டின் பல தொகுதி ஆட்சிமன்ற அங்கத்தவர்களும், அரசாங்க நிறுவனங்கள், கிராம, மாநகரசபைகள், இணைப்புச்சபைகள் முதலியன கைத்தொழில் அமைச்சுக்கும், சிறு கைத்தொழில்இலாகாவுக்கும். சிறுகைத்தொழில் ஆக்கத்தையும். கிராமிய பொருளாதார அபிவிருத்தியையும்ஆதரித்து தீர்மானங்கள் அனுப்பியுள்ளனர் எனத் தெரியவருகிறது. இதிலிருந்து மக்களிடையே சிறுகைத்தொழில் ஆக்கத்துக்கு இருக்கும் வரவேற்பு நன்கு புலனகிறது. இவையிலிருந்தும் அவர்களது எண்ணங்களை விருப்பை நிறைவேற்ற நிறுவனங்கள் இல்லாமை பெரும் குறைபாடேயாகும் கைத்தொழிற்சபை மேற்படி தீர்மானங்களையும், திட்டங்களையும் ஆராய்ந்து மாவட்ட கூட்டுத்தாபனங்கள் நிறுவ வழிவருக்கவேண்டும். இவ்வாறு நிறுவப்படும் மாவட்டக் கூட்டுத்தாபனங்களுக்கு அவற்றின் முதல்வேலைகளைக் கவனிக்க அரசாங்கம் நிதியுதவிஅளிக்கவேண்டும், பின்னர் இத்தாபனங்கள் கடன்மூலமோ அல்லதுதாம் பெறும் வருவாயின்மூலமோ மேலும் சிறுகைத்தொழில் அபிவிருத்தியைக் கவனிக்கக் கூடியதாகவிருக்கும்.

### மக்களின் நேரடித் தொடர்பு

இம்மாவட்ட கூட்டுத்தாபனங்களால் ஏற்படும் பிரதான நன்மை தொழிலில் ஈடுபடும் மக்களின் நேரடித் தொடர்பேயாகும் தற்போது தலைநகரில் உள்ள சிறுகைத்தொழில் இலாகாவுடன் மக்கள் இலகுவில் நேரடித்தொடர்பு கொள்ள இயலாது. தனியார் துறையினரும், தரகரும், கொந்தராத்துக்காரரும், முதலாளிகளுமே இலாகாவுடன் இலகுவாகத் தொடர்புகொள்ள முடிகிறது. இவர்களே தம் கிராமங்களில் தம்மால் மேற்கொள்ளப்படும் தொழில் பற்றியும், உற்பத்தி பற்றியும், தொழிலாளர் நிலைபற்றியும் பேசி முடிவுசெய்து விடுகிறார்கள். ஒரு சாராரது முடிவே அநேகமாக இலாகாவுக்குக் கிடைக்கின்றது. இத்தகையதொரு தனித்தலைமை நீங்கி, ம் புரியும் தொழிலின் பயனில் தகுந்த பங்கைப்பெற வழி வகுக்கவல்லது மாவட்டக் கூட்டுத் தாபனங்களேயாகும். தொழிலாளர்கள் தங்கள் மாவட்டத்தில் நிறுவப்படும் கூட்டுத் தாபனத்தில் சென்று தங்களின் குறைபாடுகளை எடுத்துக்கூறலாம். லாபத்தில் தங்களுக்கும் பங்கு வேண்டுமெனக் கோரலாம். அதுமட்டுமன்றிச் செலவின்றித் தொழில் நுட்பங்களையும், பயிற்சியையும் தத்தம் தொழிலில் பெற்றுக்கொள்ளலாம்.

### பாரிய கைத்தொழிலுக்கும் வாய்ப்பு

இவ்வாறு படிப்படியாக இம்மாவட்டக் கூட்டுத்தாபனங்கள் நிறுவப்பட்டு நல்ல வளர்ச்சி அடையுமானுல் கிராமங்களில் சிறு கைத்தொழில்களோடு பாரிய கைத்தொழில்களையும் இக் கூட்டுஸ்தாபனங்கள் நிறுவ காலகதியில் வாய்ப்பேற்படும். பிரித்தானியாவின் பல பகுதிகளில் ஆதியில் முதன்முதல் சிறு ஊதுலைகளைப் பயன்படுத்திச் சிறு கைத்தொழில்கள் வளர்ச்சியடைந்தன. பின்னர் அவை வளர்ச்சியடைந்து பாரிய கைத்தொழில்களுக்கு வழிவகுத்தன. இதேபோன்று நாம் இப்போது கிராமங்களில் ஆரம்பிக்கும் சிறு கைத்தொழில்கள் வருங்காலத்தில் யந்திரசாதன உதவிகளுடன் பாரிய கைத்தொழில்களாக அமையுமென நிச்சயம் எதிர்பார்க்கலாம்;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...ஸ்தாபனங்கள்

...களை விரு
...ற்ற நிறுவ
...மை பெறும்
...ம் கைத்
...மேற்படி தீர்
...திட்டங்களை
... மாவட்ட
...கள் நிறுவ
...டும். இவ்
...ம் மாவட்
...னங்களுக்கு
...வேலைகளைக்
...க்கம் நிதி
...ண்டும், பின்
...தாபனங்கள்
...ல்லது தாம்
...ன்மூலமோ
...த்தொழில்
... கவனிக்கக்
...ரும்.

...ரடித்

...கூட்டுத்தா
...ப்படும் பிர
... தொழிலில்
...ன் நேரடித்
...ம் தற்
...ல் உள்ள

## குறைகள் நீங்கும்

இதனால் கைத்தொழில்கள் பரம்பலாக அமையும். ஏகபோக உரிமைகள் ஒழியும், ஒரு சிலரது பக்குள் புகும் பணம் பலரது கைகளுக்கும், நாட்டின் நிதியறைக்கும் செல்லும். இளைஞர்கள் வேலைவாய்ப்பைத் தத்தம் கிராமத்திலேயே

— குணம் —

பெறும் வாய்ப்பைப் பெறுவதால் தற்போது போன்று நகரத்தை நாடாது கிராமத்திலேயே வாழ்க்கையை அமைத்துக் கொள்வார்கள். சுருக்கக் கூறின், சிறுகைத் தொழில் வளர்ச்சி ஒரு தனிப்பட்ட ஒரு வகுப்பையே உருவாக்கிவிடும்.

## இலகுவாக அமைக்கலாம்

இந்த மாவட்ட கூட்டுஸ்தது. மற்றைய கூட்டுத்தாபனங்களும் அநேகமாக இந்த நிலையிலேயேயுள்ளன. ஆனால் இந்தமாவட்ட கூட்டுஸ்தாபனங்களால் அரசாங்கத்துக்கு கஷ்டமேற்படாது. மாவட்டத்திலுள்ள மக்களது நிதியை அதாவது தொழிலாளர்களது பணத்தைக் கொண்டே இதை வளர்த்துவிடலாம் அதுமட்டுமன்றி ஒவ்வொரு மாவட்டத்துக்கும் தக்கவாறு தொழில்களையும் அதாவது அங்கு கிடைக்கும் மூலப்பொருள் மூலதனம் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு அமைக்கலாம். இதனால் மூலப்பொருள் இறக்குமதி என்ற விடயத்துக்கே இடமிருக்காது. தொழிலாளர்களுக்கு அவர்கள் விரும்பிய தொழிலில் ஈடுபட அங்கு கிடைக்கும் மூலப்பொருளையும் தொழிற்சாலை அமைப்பதற்குவேண்டிய உதவிகளையும் இத்தாபனம் செய்து கொடுக்கும். தொழிலாளர்

# ...ர்ச்சிக்கும் பொருளாதார உதவும் ஸ்தாபனங்கள்

...ல் இலாகா
...இலகுவில்
...ாடர்பு
...தனியசர்
...தரகரும்,
...காரரும்,
... இலாகா
...வாகத்
... முடி
...தம் கிரா
...ால் மேற்
... தொழில்
...த்தி பற்றி
...ர் நிலைபற்
...டிவுசெய்து
...ஒரு சாரா
...அநேகமாக
...கிடைக்கின்
...கையெ..று
...க்கி, ...ம்
...ன் பயனில்
...பெற வழி
...மாவட்டக்
...ங்களேயா
...ர்கள் தங்
...ல் நிறுவப்
...பனத்தில்
...ன் குறை
...கூறலாம்.
...களுக்கும்
...க் கோர
...டுமன்றிச்
...தொழில்நுட்
...சியையும்
...ல் பெற்

...க்கும்

...ப்படியாக
...ட்டுத்தாப
...ட்டு நல்ல
...டுமானல்
...று கைத்
...ாரிய
...யும் இக்
...ன் நிறுவ
...ப்பேற்
...னியாவின்
... ஆதியில்
... ஊதுலை
...திச் சிறு
... வளர்ச்சி
...ர் ஆவை
... பாவ
...கு வழி
...போன்று
... கிராமங்
...ம் சிறு
... வருங்க
...ன உகவி
...கைத்தொ
...மயுமென
...க்கலாம்;

தாபனங்களைப் புதிதாக நிறுவுதல் தற்போதைய நாட்டின் நிதி நிலைமையில் சாத்தியமாகாதுஎன நாம் நினைக்கலாம்: ஆனால் இக்கூட்டுஸ்தாபனங்களை புதிதாக அடிக்கல் நாட்டி ஆரம்பிக்கவேண்டுமென்பதல்ல. உள்ளதைக் கொண்டு சிக்கன முறையில் ஆரம்பிக்கக் கூடியதான சாத்தியக்கூறுகள் நாட்டில் உள்ளன. சிறுகைத்தொழில் இலாகாவின் கயிறு திரித்தல், மட்பாண்ட வேலை, பன்னவேலை, தச்சுவேலை ஆகியன மேற்கொள்ளும் நிலையங்களும், இலாகாவின் மின்தறி, கைத்தறி நிலையங்களும் உள்ளன. இவற்றை மாவட்டக் கூட்டுஸ்தாபனங்கள் பொறுப்பேற்கலாம் இதனால் இக்கூட்டுஸ்தாபனத்தை நிறுவவேண்டிய இடம், பொருள், ஏவல் பிரச்சினைகள் அகன்றுவிடும். கைத்தொழில் கூட்டுறவுச் சங்கங்களையும் இக்கூட்டுஸ்தாபனம் எடுக்க முயற்சி எடுக்கலாம்.

சோஷலிச அரசாங்கமாகிய மக்கள் அரசாங்கத்தின் அங்கத்தவர்கள் யாவரும் பிரதேச அபிவிருத்தியையே விரும்புகிறார்கள் என்பது அவர்களது கருத்துக்களாலும், கோரிக்கைகளாலும் எமக்கு விளங்குகிறது. எனவே இவர்களுக்குப் பல தரப்பட்ட நன்மை பயக்கும் மாவட்டக் கூட்டுஸ்தாபனங்களை நிறுவ மந்திரி சபையின் அங்கீகாரம் பெறுதல் கஷ்டமாக இருக்காது. தனியார்துறை முதலாளிகளின் ஆதிக்கத்தை இவர்கள் விரும்பவில்லையாதலால் சகல வழிகளிலும் தொழிலாளருக்கும் சிறப்பாக நாட்டுக்கும் பயன்படத்தக்க இக்கூட்டுஸ்தாபனங்களை நிறுவுவதில் அக்கறைகொள்ள வேண்டும். கைத்தொழில்களைப் பொறுத்தளவில் இம்மாவட்டக் கூட்டுஸ்தாபனங்கள் இன்றியமையாதனவாகும்.

## செயல்படுவதில் கஷ்டமில்லை

இக்கூட்டுஸ்தாபனங்கள் செயல்படுவதிலும் கஷ்டமிருக்காது. தற்போதுள்ள கைத்தொழில் கூட்டுஸ்தாபனம் கைத்தொழில் விருத்திக்கு நிதியுதவியை அரசாங்கத்திடமிருந்தே எதிர்பார்க்க வேண்டியுள்ளது. மாவட்டக் கூட்டுஸ்தாபனங்களின் உற்பத்திப் பொருட்களை சந்தைப்படுத்தல், கொண்டுசெல்லல் ஆகியனவற்றையும் இக்கூட்டுஸ்தாபனம் கவனித்ததுவும்.

## பரம்பல் ஏற்படுகிறது

சுருங்கக்கூறின் இக்கூட்டுஸ்தாபனம் சுதந்திரமுடையதாகவியங்கும் அரசாங்க நிர்வாக. நிதிஉதவிகள் இதற்கு இருக்கமாட்டாது. இதனால் உற்பத்தி வர்த்தக நடவடிக்கைகளில் சுதந்திரமாக தொழிலாளர் ஈடுபட வாய்ப்பு ஏற்படுகிறது. சிறுகைத்தொழில் இலாகாவினால் இன்றையதேவைகளைப் பூர்த்தி செய்ய முடியாது. சிறுகைத்தொழில் கூட்டுறவு நிறுவனங்களும் வெற்றி அளிக்கவில்லை புதிய கூட்டுறவு சங்கங்களுக்குக்கும்கவனிக்க வேண்டிய அபிவிருத்திவேலைகள் அதிகமுண்டு. அத்துடன் கூட்டுறவில் சில இடங்களில் ஊழல்கள்நிறைந்துள்ளன. சில வீழ்ச்சியடைந்துள்ளன. இதனால் இக்கூட்டுறவு நிறுவனங்களை நம்பியிருக்க முடியாது.

இக்குறைபாடுகள் யாவற்றிற்கும் முற்றுப்புள்ளி வைக்கவல்லது மாவட்ட கூட்டுஸ்தாபனங்களேயாகும். இதனால் பொருளாதாரம்பரம்பலாகிறது. கைத்தொழில்களும் மையநீக்கம் பெற்று பரம்பலாக அமைகின்றன.

## மாவட்ட ஆயுள்வேத ஆஸ்பத்திரிகள்

கோட்டை, செவ்வாய்

நாட்டின் சகல மாவட்டங்களிலும் ஒவ்வொரு மாவட்டத்திற்கு ஒவ்வொரு ஆயுள்வேத ஆஸ்பத்திரி நிறுவ சுகாதார அமைச்சு முடிவு செய்துள்ளது.

இரத்தினபுரி மாவட்டத்தில் இத்தகையதொரு பூரணத்துவம் வாய்ந்த ஆயுள்வேத ஆஸ்பத்திரி நிறுவப்பட்டிருக்கிறது. இதுபோன்றே மற்றைய மாவட்டங்களிலும் நிறுவுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும் எனச் சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

## எந்தச்சமூகத்...

(8-ம் பக்கத்தொடர்ச்சி)

வேசத்திற்கு சம்மதிக்காவிட்டால், கோர்ட்டு மூலமாக திறந்துவிடுவதற்கு தனக்கு தைரியம் இருப்பதாக பொலிஸ் அதிபர் கூறினார். அக்கூட்டத்தில் இன்ஸ்பெக்டர் மூர்த்தியும் தானும் அப்படித்தான் செய்யப் போவதாகக் கூறினார். அக்கூட்டத்தில் ஒரு தீர்மானமும் எடுக்கப்படவில்லை. கூட்டம் குழப்பத்தில் முடிந்தது.

இக்கூட்டத்திற்குமுன் அரசாங்க அதிபருடன் இரண்டு மூன்று தடவை தொடர்பு கொண்டிருக்கிறேன். செல்வச்சந்நிதி கோவிலில் நடத்தது பற்றி பத்திரிகையில் படித்திருந்தேன். ஆலயப் பிரவேசம்பற்றி யாழ்ப்பாணப் பகுதியில் சார்பான அபிப்பிராயம் இல்லை. அந்தக் காலத்தில் கலவரம் ஒன்றும் நடக்கவில்லை.

### சுந்தரர் சந்தித்தார்

ஒருநாள் வி. சுந்தரலிங்கம் எனக்கு டெலிபோன் செய்து என்னைக் காணவேண்டுமென்றார். காணலாம் என்று சொன்னேன். அவர் என்னை வந்து சந்தித்தார். திருவிழாவில் 25 நாட்களும் தான் சமுகமளித்து உதவி செய்யப்போவதாக சுந்தரலிங்கம் கூறினார். அது தனக்கு ஒரு நேர்த்திக்கடன் என்றும் அவர் சொன்னார். தம்பிப்பிள்ளையும் மற்றவர்களும் மறுநாள் வந்து சந்தித்தார்கள்.

மறுநாள் அரசாங்க அதிபர் ஒரு மகாநாட்டைக் கூட்டியிருந்தார். எனது மகனும் அந்த மகாநாட்டிற்கு வந்திருந்தார். சிறுபான்மை சமூகத்தைச் சேர்ந்த உபயகாரரும் அம்மகாநாட்டிற்கு வந்திருந்தார்.

வி. சுந்தரலிங்கம், மாவிட்டபுரம் கோயில் சார்பில் மகாநாட்டில் பேசினார். வடபகுதி பொலிஸ் அதிபருடன் வி சுந்தரலிங்கம் சந்தித்ததுபற்றி பத்திரிகையில் வந்திருந்தது. நான் ஆலோசித்தபின் வி. சுந்தரலிங்கத்திற்கு அதிகாரம் கொடுத்தேன்.

### கோவிலில் குழப்பம்

கொடியேற்றத் தினத்தன்று வழக்கம்போல் சனங்கள் வந்திருந்தனர். அவர்களுடன் சிறுபான்மைச் சமூகத்தவரும் வந்திருந்தனர். அவர்களை உள்ளே செல்லவிடாமல் தொண்டர்படையினர் தடை செய்தனர். அங்கு பொலிசாரும் பெருமளவில் நின்றனர். சிறுபான்மைச் சமூகத்தவர் பொலிசில் முறைப்பாடு செய்தனர். என்ன நடந்ததென்று நான் காணவில்லை. நான் உட்பிரகாரத்திற்குள் இருந்தேன். 68-ம் ஆண்டு 14-ம் திருவிழா வரை எவ்வித சம்பவமும் நடக்கவில்லை. 16-ம் திருவிழாவன்று குழப்பம் நடந்ததென்று பின்னர் அறிந்தேன் 17-ம் திருவிழாவன்றும் குழப்பம் நடந்ததென்றும் அறிந்தேன்

அரசாங்க அதிபரும், பொலிஸ் அதிபரும் வந்து இப்பிரச்சினையைச் சமாதானமாகத் தீர்த்துவைக்கும்படி கேட்டார்கள். இதற்கு உபயகாரர்கள் சம்மதிக்கவில்லை. நான் அன்று வீட்டிலிருந்தேன். கோவில் வாசலில் எல்லோரும் இருப்பதாகக் கூறினார்கள். இது சப்பறத் திருவிழாவன்று நடந்தது

### சிவப்பு நோட்டீஸ்

மாலை 5 மணிக்குச் சமாதானமாகத் தீர்க்கப்பட்டிருப்பதாகவும் திருவிழாவுக்கு ஒழுங்கு செய்யும்படியும் அரசாங்க அதிபர் வந்து கூறினார், அதன்பின் சப்பறத்திருவிழா நடந்தது. ஒப்பந்தத்தை அரசாங்க அதிபர் எனக்குக் காட்டினார். 2-ம் எதிர்மனுதாரரான வி. சுந்தரலிங்கம் [illegible] வர் சிவப்பு நோட்டீஸ் ஒன்றைக் கொண்டுவந்து தந்தார். அதனை யாரோ வாங்கிச்சென்றனர். சப்பறத் திருவிழா நடந்துமுடிந்தது. (விசாரணை தொடர்ந்து நடைபெறுகிறது)

திருக்கேதீச்சரத்தில்

# சிவராத்திரி புராணம் அறிமுக விழா

சிவராத்திரிபுராண நூல் அறிமுகவிழா திருக்கேதீச்சர ஆலய வசந்தமண்டபத்தில் திருக்கேதீச்சரத் திருப்பணிச்சபைத்தலைவர் திரு. எஸ். சோமசுந்தரம் தலைமையில் நடைபெற்றது. இந்நூலை இடபவாகனத்தில் வைத்து வீதிவலமாக மேளவாத்திய சகிதம் விழா நடந்த வசந்தமண்டபத்திற்கு எழுந்தருளச் செய்தனர்.

தேவார பாராயணத்துடன் அறிமுகவிழா ஆரம்பமானதும் தலைவர் தது முன்னுரையில் சைவசமய நூல்களைச் சைவமக்கள் பெற்றுப்பயனடைவதற்கு உதவியாக இத்தகைய புராணங்கள் - சாத்திர நூல்கள் எங்கள் நாட்டில் வெளிவருதல் இன்றியமையாததென்பதை விளக்கிப்பேசி சிவராத்திரி புராணத்தை மூன்றும்பதிப்பாக வெளியீடுசெய்த மறவன்புலோ திரு. மு.கணபதிப்பிள்ளையின் பணியைச் சைவ உலகம் உவந்தேற்கின்றது. எனப்பாராட்டினார்.

சிவராத்திரி புராணப் பாடல்களைச் சந்திபிரித்து எழுதி அச்சிட உதவிய பண்டிதர் க. மயில்வாகனன் 250 வருடங்களுக்கு முன் வாழ்ந்த வரதபண்டிதர் சிவராத்திரி புராணம் செய்தமையையும் இதற்கு உடுப்பிட்டி குமாரசூரியப்பிள்ளை உரை எழுதி உதவியதையும் இந்நூல் சைவமக்கள் நெறிவளர உதவியதையும் இந்நூல் கிடைக்காமையால் உள்ள இடர்ப்பாட்டைத் தவிர்க்க யாழ். ஸ்ரீகாந்தா அச்சக அதிபர் மூன்றும் பதிப்பை வெளியிட்டமையையும் பாராட்டிப் பேசினார்.

விவேகானந்தசபைத் தலைவர் திரு ஆர். சபாநாயகம் இந்நூல் இந்நாள் வளர்ச்சிக்கமையயாவரும் படித்துப் பயன் பெறுவதற்கேற்ற வகையில் பல புதிய அம்சங்களோடு பதித்து வெளியிட்ட பதிப்பாசிரியரைப் பாராட்டி இத்தவகையில் தொடர்ந்து இப்படியான சைவ நூல்களை வெளியிட உதவவேண்டுமெனவும் கேட்டுக்கொண்டார்.

திரு. அருள் தியாகராசா சிவராத்திரி புராணத்திற்கு நூலாசிரியர்காலத் திருந்த மயில்வாகனப்புலவர் சின்னத்தம்பிப்புலவர் சிறப்புப்பாயிலும் தந்தமையையும் குமாரசூரியப்பிள்ளை செய்த உரைக்கு சுன்னாகம் குமாரசுவாமிப்புலவர்முதலானோர் உரைச்சிறப்புப் பாயினும் செய்தமையையும் குறிப்பிட்டு மூன்றும் பதிப்பில் காணப்படும் புதிய அம்சங்களையும் நூலின்சிறப்பையும் எடுத்துக்கூறி பதிப்பாளர் திரு. மு. கணபதிப்பிள்ளை சைவசமய நூல்கள் பலவற்றை இலவச வெளியீடாக வெளியிட்டிருப்பதையும் குறிப்பிட்டுப் பேசினார்.

திரு. கே. பி. ஹரன் சிவராத்திரி தினத்தில் கோயில்களிலும் மடங்களிலும் சிவராத்திரிபுராணம் படிப்பது மேலான சிவபுண்ணியம் எனவும் இந்நூலின் மூன்றும் பதிப்பு தமிழ் நாட்டில் வெளியாகும் சிறந்த பதிப்புகளை ஒத்ததாக அமைந்துள்ளதெனவும் இங்குவெளியாகும் இவ்வித நல்ல நூல்களை தமிழகத்திற்கு அனுப்பிவைத்தால் அங்குபயன்படுவதோடு ஈழத்தின் பெருமையும் புலமையும் தமிழகத்தில் விளங்க உதவியாக அமையும் எனவும் கூறினார்

பதிப்பாசிரியர் திருப்பணிநிதிக்கு அளித்த 200 சிவராத்திரி புராணப்பிரதிகளை திருக்கேதீச்சரத்திருப்பணிச் சபைக்காரியதரிசி திரு எஸ். கந்தையா பெற்று சபைச் சார்பில்நன்றிதெரிவித்தார்.

இதைத்தொடர்ந்து பதிப்பாசிரியர் மு கணபதிப்பிள்ளை பேசி சிவராத்திரி புராணம் மூன்றும்பதிப்பு வெளிவந்த வரலாற்றை எடுத்துரைத்து இப்புராணத்தின் அறிமுகவிழா இப்புண்ணியதலத்தில் நடைபெற ஏதுவாகவிருந்த திருக்கேதீச்சரத்திருப்பணிச்சபையாரின் முயற்சிகளைப் பாராட்டியதுடன் சிவராத்திரி புராணத்தை அறிமுக விளக்கம் செய்து பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை முதலான பெரியார்களுக்கு நன்றிதெரிவித்துப்பேசினார்.

## மூடப்பட்டுள்ளது

நெடுங்கேணி, செவ்

நெடுங்கேணி மகாவித்தியாலயத்தில் சுமார் 10 ஆயிரம் ரூபா செலவில் அமைக்கப்பட்ட கட்டிடம் ஒன்று பல மாதங்களாகியும் பாவனையின்றிமூடப்பட்டுள்ளது.

0 0 0

ஊர்காவற்றுறையில்

## தமிழ்த் தந்தி ஏற்க மறுப்பு?

வேலணை, செவ்

தமிழில் எழுதப்பட்ட தந்தி ஒன்றை ஊர்காவற்றுறைத் தபால் கந்தோரில் ஏற்க மறுக்கப்பட்டதாம்.

இம்மாதம் 24-ம் திகதி வேலணை மேற்கைச் சேர்ந்த இ. சரவணபவான் என்பவர் யாழ்ப்பாணத்துக்கு அனுப்புவதற்காக தமிழில் எழுதப்பட்ட தந்தி ஒன்றை ஊர்காவற்றுறை தபால் நிலைய அதிபரிடம் கொடுத்த போது அவர் அதை ஏற்க மறுத்துவிட்டதாக தீவுப்பகுதி எம். பி. யிடம் புகார் செய்துள்ளனர்.

தந்தியை ஆங்கிலத்தில் எழுதினால்தான் ஏற்க முடியும் என்று தபால் அதிபர் கூறிவிட்டாராம். இதனால் அன்றையதினம் தந்தி கொடுபடவில்லை.

## கச்சியப்பர் திருநாள்

யாழ்ப்பாணம், புதன்

இம்மாதம்5-ந் திகதிவெள்ளிக்கிழமை கச்சியப்பசிவாசாரியார் குருபூசை நடைபெறுவதனை முன்னிட்டு நல்லை ஞானசம்பந்தர் ஆதீனத்தில் அன்று பிற்பகல் 5 மணிக்கு விசேஷ நிகழ்ச்சிகள் நாவலர் கந்தபுராண சபை ஆதரவில் நடைபெறவிருக்கிறது காலை நல்லூர் ஆலயத்தில் கந்தபுராண சபையினர் விசேஷவழிபாடு செய்வர்-நாவலர் திருவுருவச்சிலைக்கும் அஞ்சலி செய்வர்.

## கவுன்ஸில் வேண்டும்

கோட்டை, செவ்

ஆட்சிமன்றச் சட்டத்தின் கீழ் தாதிமார் தொழிலோடு சம்பந்தப்பட்ட பல்வேறு விஷயங்களைக் கவனிக்கதாதிமார் தொழிற்கவுன்சில் ஒன்றை அமைக்கவேண்டும் என சுகாதார அமைச்சரை இலங்கை தாதிமார் சங்கம் கோரியுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "அம்பாறை மாவட்டத்தில் விவசாயத்துக்கு 2000 ஏக்கர் நிலம் ஒதுக்கப்படும்"

## கல்முனை எம். பி. தகவல்

பாண்டிருப்பு, செவ்

மக்கள் மத்தியில் நாட்டுப் பற்று உதயமாகா விடில் எந்த அரசாங்கம் பதவிக்கு வந்தாலும் நாட்டை முன்னேற்ற முடியாது. எதற்கும் அரசாங்கத்தையே நம்பியிருக்கும் எண்ணம் தவறானது. மக்களின் முயற்சிகளுக்குத் துணைசெய்வ தான் அரசாங்கத்தின் தலையாய கடன் இதைமறந்துவிடக் கூடாது.

இவ்வாறு கல்முனை கார்மேல் மகளிர் பாடசாலையில் நடைபெற்ற அம்பாறை மாவட்ட வானொலி விவசாய விழாவில் கலந்து கொண்டு உரைநிகழ்த்திய கல்முனை ஆட்சி மன்ற உறுப்பினர் ஜனுப் எம். ஸி. அகமது கூறினார். மேலும் அவர் பேசுகையில் செத்தல்மிளகாய், வெங்காயம் போன்ற உப உணவுப் பொருட்களின் உத்தரவாத விலையை அரசாங்கம் அதிகரித்துள்ளதோதும் விவசாயிகள் உற்பத்தியில் ஏனோ தயக்கம் காட்டி வருவதாகவும் தமது வேண்டுகோளை ஏற்ற மக்கள் அரசாங்கம் 2 ஆயிரம் ஏக்கர் பயிர்ச்செய்கைக்கான நிலத்தை அம்பாறை மாவட்டத்து விவசாயிகளுக்கென ஒதுக்க விருக்கிறதென்றும் சொன்னார்.

அம்பாறை மாவட்ட விவசாய அலுவலகத்தின் அனுசரணையுடன் இலங்கை ஒலிபரப்புக்கூட்டுத்தாபனம் நடத்திய இவ்விழாவை ஜனுப் எம் ஸி அகமது எம் பி குத்துவிளக்கேற்றி ஆரம்பித்துவைத்தார். அம்பாறை மாவட்ட விவசாய அலுவலர் திரு எல் ஏ எஸ் பெரேராவினால் ஆங்கிலத்திலும், மாவட்ட மேலதிக அலுவலர் திரு ஜெயராசாவினால் தமிழிலும் வரவேற்புரை நிகழ்த்தப்பட்டது. அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் திரு ஆர் பி வீரக்கோனும் பாரியாரும் பிரதமவிருந்தினராக கலந்துகொண்டனர் விழாவின் ஓரங்கமாகநடைபெற்ற விவசாய அறிவுப் போட்டியில் வெற்றிபெற்றவர்களுக்கு அரசாங்க அதிபரின் பாரியார் பரிசுகள் வழங்கினார்.

பரிசுபெற்றோர் விபரம் வருமாறு: ஜனுப் ஐ எல் எம் முகைதீன்பாவா, திரு வீ சுதாகரன், ஜனுப்கள் எஸ் எம் உபாயத்துல்லா, எஸ் எம் அப்துல். வகீர், செல்வி எல். வி பாலசுந்தரி. ஜனுப்கள் எஸ் ஏ காசிம், எம் எல் எம் பாறூக், திரு எஸ் கந்தசாமி.

— —

## 'யு என் பியின் தவறை கூட்டணி விடக்கூடாது'

பருத்தித்துறை, செவ்.

'மக்களை எதிர்நோக்கி நிற்கும் வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு. வேலையில்லாத்திண்டாட்டம் போன்ற பிரச்னைகளுக்குஉடனடித்தீர்வுகாண்பதில் தாமதம் ஏற்படின், மக்களின் நம்பிக்கையை அரசாங்கம் இழக்கவேண்டி நேரிடும் எந்தத் தவறினால் யு. என் பி அரசாங்கம்தோற்கடிக்கப்பட்டதோ, அதே தவறை கூட்டணி அரசாங்கம்விடக்கூடாது'

இவ்வாறு ஆன்னலை தயாநிதி கிராம முன்னேற்றச் சங்கக் கூட்டத்தில் கடமையாற்றிய சிறுபான்மைத் தமிழர் மகாசபை நிர்வாகச் செயலாளர் திரு. எஸ். செல்லையா கூறினார். இக்கூட்டத்திற்குத் திரு. கே, குலேந்திரம் தலைமைவகித்தார்.

திரு கே எஸ் சிதம்பரநாதன். திரு டி இராசரத்தினம் ஆகியோரும் பேசினார்.

## விவசாய பயிற்சி நிலையங்கள்

கோட்டை, செவ்.

பலதுறைகளில் விவசாயப் பயிற்சியை இளைஞர்களுக்கு அளிப்பதற்கு அரசாங்கம் நாட்டின் பலபாகங்களிலும் விவசாயப் பயிற்சி நிலையங்களை அமைக்கவுள்ளது.

திசமாரகமவில்இத்தகைய பயிற்சி நிலையங்களில் விவசாயம், விவசாயக் கருவிகளைப் பழுதுபார்த்தல், பருத்தி மிளகாய் ஆகியவற்றை நவீனமுறையில் பயிர்செய்தல் போன்ற பல்வேறுதுறைப் பயிற்சிகள் இடம் பெறவுள்ளன.

பயிற்சிபெற்ற மாணவர்கள் இளைஞர்கள் ஆகுயோருக்கு அரசாங்கம் காணிகளை வழங்கி உதவிசெய்யவும் நடவடிக்கைகள் ஏடுக்கப்படவிருக்கிறது'

## இன்றைய பலன்

மாசி மாதம் 19-ம் திகதி

(3-3-71)

மேஷம்- ஆத்திரப்படுவதால் நண்பர்களைப் பகைத்துக்கொள்ளுவீர்கள். எழுத்துமூலம் தொடர்பு கொள்வதை இன்று தவிர்த்துக்கொள்ளவும்

ரிஷபம்-பணமுடைதீரும் பந்துக்களின் தொடர்புகள் பெருகும். குடும்பத்தில் பரவசமான சூழ்நிலை தென்படும்.

மிதுனம்- கருத்துவேற்றுமைகள் கலகத்திற்கு இடமளிக்கும். புதிய இடத்திலிருந்து பகை தலைதூக்கலாம். மௌனம் நன்று.

கடகம்- உறவுகள் பலப்படும். உள்ளத்தில் உவகை துள்ளும். உயர்வுக்கு வழி பிறக்கும். உவப்பான தினம்

சிம்மம்- கனிவான பேச்சு காந்தம்போல் பார்வை. கன்னியர் உறவு காதலுக்கும் இடமுண்டு. கவர்ச்சிகரமான நாள்.

கன்னி- தானிய நஷ்டத்தால் கவலைகள் தலைகாட்டும். தனிவழியை நாடுவீர், அமைதியும் பறக்கும்.

துலாம்- குடும்பவழியால் மனதுக்கு நிம்மதி பிறக்கும். நீண்டநாள் பூமிப்பிணக்கு சமரசமாக முடிவடையும்.

விருச்சிகம்- அடுத்தவரை நம்புவதால் ஆபத்து மிகவும் உண்டு. வீண்செலவு வேண்டாம், விபரீதம் விளைந்திடுமே,

தனுசு- கை கொடுத்து உதவுவதற்கு தந்தை முன்வருவார். காரிய சித்தியும் கிட்டும். திருப்தியான தினம்,

மகரம்- தொழில்துறையில் நல்மாற்றங்கள் ஏற்படும். மேலதிகாரிகளின் ஆதரவு தாராளமாகக் கிடைக்கும் இன்று சுப தினம்.

கும்பம்- பொருள்வரவு, உபசாரம், பொழுதுபோக்கு இவைகளுடன் உற்சாகமூட்டும் செய்தியும் கிடைக்கும்.

மீனம்- சிறிய விடயத்திற்குக் கூட அதிக ஆத்திரம் ஏற்படலாம். பல வழிகளிலும் பணம்செலவாகும்

**சோதிடக் கலாநிதி**
**இருமலை க. வேலுப்பிள்ளை**

## மீண்டும் வேலைக்கு செல்லலாம்

தாவடி, செவ்

1969ம் ஆண்டு சம்பளப் போராட்டத்தினால் வேலைநீக்கம் செய்யப்பட்டிருந்த இலங்கைச் சுருட்டுத் தொழிலாளர் சங்க நிர்வாகஸ்தர்கள் 7 பேருக்கு மீண்டும் வேலைக்குச் செல்லாமென தொழில் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

திரு. வல்லிபுரம், தொழிலாளர்கள் சார்பில் வாதாடினார்.

தாவடியிலுள்ள சுருட்டுத் தொழிற்சாலையில் வேலை செய்துவந்த 7 பேர் சம்பளத் தகராறு காரணமாக வேலைநீக்கம் செய்யப்பட்டிருந்தவர். இவர்கள் தொழில் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல்செய்திருந்தனர்

இன்று முதல் மேற்படி தொழிற்சாலைக்கு மீண்டும் இவர்கள் வேலைக்குச் செல்வார்கள்.

—

## மின்சார ஊழியர் தீர்மானம்

மாவிட்டபுரம், செவ்

மின்சாரப்பகுதியில் கடமையாற்றும் சகல ஊழியர்களுக்கும் பாதுகாப்புநிதி வழங்கவேண்டும் என்றுஸ்தலஸ்தாபனப் பகுதியைக் கோரும் தீர்மானம் ஒன்று உள்ளூராட்சி மின்சார ஊழியர் சங்கக்கூட்டத்தில்நிறைவேற்றப்பட்டது.

திரு. எஸ் செல்லையா தலைமையில் நடந்த இக்கூட்டத்தில் மின்சாரஊழியர் பிரச்சனைகள் குறித்து அவ்வப்பகுதி மின்சார ஊழியர்கள் கடமையாற்றும் உள்ளூராட்சி மன்றங்களுடன் பேச்சுவார்த்தை நடாத்தல் வேண்டும் என்று கோரும் தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது.

— —

## ஈராக்குடன் புதிய ஒப்பந்தம்

கோட்டை, செவ்

ஈராக்குக்கும் இலங்கைக்கும் இடையில் புதிய வர்த்தக உடன்படிக்கையொன்று கைச்சாத் திடப்பட்டுள்ளது

இவ்வொப்பந்தத்தை உள்நாட்டு வெளிநாட்டு வர்த்தக அமைச்சர் திரு ரி பி இலங்கரத்னா கைச்சாத்திட்டுள்ளார் இவ்வொப்பந்தத்தின் கீழ் ஈராக் இலங்கையிடமிருந்து தான் பெறும் தேயிலையின் அளவை அதிகரித்துள்ளது

ஈராக்கும் பெருந்தொகையான பேரீச்சம்பழத்தை மேற்படி ஒப்பந்தத்தின்கீழ் இலங்கைக்கு அனுப்பிவைக்கவிருக்கிறது

—

**சிரமதானத்தால்**

## 75000 ரூபா லாபம்

கோட்டை, செவ்:

கண்டிப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட சிரமதான வேலைகளால் அரசாங்கத்துக்கு 75000 ரூபா மீதமேற்பட்டுள்ளது.

கண்டிப்பகுதியில் சமீபத்தில் அப்பகுதி மக்களாலும் சனசமூக நிலையங்களாலும் சிரமதானமூலம் பாலங்கள், கிணறுகள், புகையிரத பாதைகள் வீதிகள் முதலியன திருத்தப்பட்டன. இவ்வேலைகளைப் பூர்த்தியாக்க அரசாங்கத்துக்கு 75000 ரூபா செலவாகியிருக்கும் எனக்

# "இளம் விவசாயிகள் கழகத்தின் வளர்ச்சி"

அம்பன், செவ்வாய்

அமெரிக்காவில் ரெக்சாஸ் என்ற கமக்காரர்களின் பிள்ளைகளாலேதா முதன்முதலில் இளம் விவசாயிகள் கழகம் ஸ்தாபிக்கப்பட்டது. 4 ஏச் கழகமென்ற பெயருடன் இயங்கிவந்த இக்கழகம் 1942-ம் ஆண்டில் இங்கிலாந்திலும் ஸ்தாபிக்கப்பட்டது. இலங்கையில் டி எஸ். சேனநாயக்கா பிரதமராக இருந்த காலத்தில் சோல்பரிப் பிரபுவின் அபிப்பிராயத்தின்படி 1952-ம் ஆண்டுதான் இலங்கையில் இக்கழகம் ஆரம்பிக்கப்பட்டது இக்கழக நாளடைவில் வளர்ச்சியுற்று வந்தமையினால் 1958-ல் இருந்து மேற்படி கழகத்திற்கென சட்டதிட்டங்கள் வகுக்கப்பட்டு சரியான முறையில் இயங்க ஆரம்பித்தது. இதற்கு முன்னெல்லாம் இவ்வியக்கம் படிப்புமூலம் கல்வியாக பாடசாலைகளில் புகட்டப்பட்டுவந்ததே யொழிய செயல் மூலம் கல்வியாக கற்பிக்கப்படவில்லை அதனால் தான் இக்கழகம் தற்போதயதைப் போல துரித வளர்ச்சியடையவில்லை தற்போது கிராமந்தோறும் ஒவ்வொரு கழகம் இயங்குமளவிற்கு கழகம் வளர்ச்சியுற்றுள்ளது, இக்கழகங்கள் கிராம ஒற்றுமையை வளர்க்கவும் விவசாய உற்பத்தியைப் பெருக்கவும் உறுதுணையாக அமைந்துள்ளன.

அம்பன் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையில் நடைபெற்ற அம்பன் இளம் விவசாயிகள் கழகவருடாந்தப் பொதுக்கூட்டத்திற்கு சமுகமளித்த வடபகுதி விவசாயக் கழகங்களின் போதனாசிரியர் திரு. என் ஸ்ரீஸ்கந்தராசா பேசுகையில்லேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்,

கழகத்தலைவர் திரு ந பத்மநாதன் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் கழகச்செயலாளர் திரு. சி. கணேசன் பேசுகையில்:

இன்றைய நிலையில் பேனு பிடிப்பதே பேரின்பமெனக் கருதும் இளம் சமுதாயத்தின் மூடநம்பிக்கை மனத்தை விட்டகலவேண்டும் பேனுபிடிக்க விரும்பும் கரங்களெல்லாம் ஏர்பிடிக்க கற்றுக் கொள்ளவேண்டும். அவ்வாறான நிலைவரும் வரையும் வேலையில்லாப் பிரச்சனையை ஒழிப்பது பெரும் பிரச்னையே என்றார்.

—

## டிப்போ

அளவெட்டி, செவ்

வேலணையில் நிறுவவிருக்கும் இ. போ. ச. உபடிப்போவை விரைவில் நிறுவும்படி இப்பகுதிமக்கள் கேட்கின்றனர். இவ் டிப்போவை நிறுவுவதன் மூலம் தீவுப் பகுதியின் பஸ் சீர்கேடுநிவர்த்தி செய்யப்படுமெனவும் எதிர்பார்க்கப் படுகிறது.

## கொக்குவில் கி. ச. பாராட்டு

யாழ்ப்பாணம். புதன்

கொக்குவில் கிராம சபையில் கடந்த மூன்று வருடங்களாக மின் அத்தியட்சகராகக்கடமையாற்றிய திரு எஸ் இராசசிங்கம் இளைப்பாறுவதையிட்டு நேற்று முன்தினம் கிராமசபை மண்டபத்தில் கிராமசபை ஊழியர்களால் பிரிவுபசாரம் அளிக்கப்பட்டது

திரு எஸ் ராஜசிங்கத்தின் சேவையைப்பாராட்டி பலர் பேசினர். கோண்டாவில் நெட்டிலிப்பாய் பகுதிக்குப் பூரண மின்விஸ்தரிப்பை சிலதனங்களில் மேற்கொண்ட அவரின் திறமையை முதலாம் வட்டார அங்கத்தவர் திரு த அருணாசலம் புகழ்ந்து கூறி திறமையுள்ளவர்களை அரசாங்கம் 55 வயதில் ஒய்வுபெற நிர்ப்பந்திப்பது அநியாயம் என்றார்.

அரசாங்கம் வேலைநேரத்தைவரையறுத்திருந்தபோதிலும் திரு ராஜசிங்கம் இரவு பத்துமணிவரை கடமையாற்றியுள்ளதுடன், தனக்குக்கீழ்உள்ள ஊழியர்களையும் அப்படியே செய்யச்செய்து பொதுமக்களிடையேதமக்கும் ஊழியர்களுக்கும் நல்லபெயரை பெற்றுள்ளவர் என்று கொக்குவில் கிராம சபை செயலாளர் பேசுகையில் கூறினார்.

கொக்குவில் கிராமசபைத் தலைவர் பொ நவரத்தினம் உட்படப் பலர் அவரின் சேவையைப் பாராட்டிப் பேசினர். இளைப்பாறிச் செல்லும் மின் அத்தியட்சகருக்கு கிராமசபை சார்பில் கைக்கடிகாரம் ஒன்று அன்பளிப்புச் செய்யப்பட்டது

## தற்கொலை

யாழ்ப்பாணம், புதன்

6 பிள்ளைகளின் தந்தை நச்சுத் திராவகம் அருந்தித் தற்கொலை செய்துகொண்டார் இச்சம்பவம் தொல்புரம் கிழக்கில் நடந்துள்ளது.

தொல்புரம் கிழக்கைச் சேர்ந்த 40 வயதான எஸ். முருகேசு என்பவரின் மரண விசாரணையில் மேற்கண்ட விபரம் தெரியவந்தது.

இறந்தவரின் மனைவி கண்ணம்மாள் சாட்சியமளிக்கையில், தனது கணவன் அடிக்கடி மதுபானம் அருந்துவதாகவும், சம்பவதினம் மகனை அனுப்பிச் சாராயம் வாங்கி, அதற்குள் நச்சுத் திராவகம் கலந்து குடித்ததாகவும், தடுப்பதற்குத் தான் முயற்சி எடுத்தும் பயனில்லாமல் போய்விட்டதென்றும் கூறினார்

மரண விசாரணை அதிகாரி திரு. என் இராசநாயகம் தற்கொலையெனத் தீர்ப்பளித்தார்


உங்கள் பிரதிக்கு இப்போதே

ஒழுங்குசெய்து கொளுங்கள்!

**'ஈழநாடு'**

நாவல் போட்டியில் முதற்பரிசு பெற்ற

**க. இராஜநாயகன்**

எழுதிய

**"பிரயாணி"**

18-3-71ல் ஆரம்பமாகின்றது.

உணர்ச்சிபோராட்டமும் உள்ளக்கமும் நிறைந்த சமுதாயத்தின் அடித்தளத்தை படம் பிடிக்கும் உயரிய நாவல்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதைபந்தாட்டம்:

# 'பாடும்மீன்' கழகத்துக்கு இலகுவான வெற்றி

யாழ்ப்பாணம், புதன்

யாழ். உதைபந்தாட்டச் சங்கத்தினால் நடாத்தப்படும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் 'ஏ' பிரிவில் 'பாடும்மீன்' விளையாட்டுக் கழகம் 'புனிதவளன் விளையாட்டுக் கழகத்தை மிக இலகுவாக வெற்றி பெற்றது.

இப்போட்டியில் பாடும்மீன் கழகமும் புனிதவளன் கழகமும் இடைவேளைவரை கடுமையாக மோதியபோதிலும், பாடும்மீன் கழகம் இடைவேளைக்குமுன்பாகவே 2 கோல்களைப் போட்டது.

இடைவேளையின் பின், பாடும்மீன் கழகம் மிக வேகமாக விளையாட முற்பட்டதினால், எதிர்க் கோஷ்டியினர் பின்னணியில் நின்று விளையாடினர். இதனால் பாடும்மீன் கழகம் அடுத்தடுத்து கோல்களைப் போட்டவண்ணமே இருந்தனர் இவர்கள் இடைவேளையின் பின்பும் மேலும் 11 கோல்களை அதிகப்படியாகப் போட்டனர். இக்கோஷ்டியின் முன்னணி வீரர்களான அகஸ்ரின் கிறேஸியன், நவாப்ரசா, றேமன், ராசையா ஆகியோர் மேற்படிக் கோல்களைப் போட்டனர்.

ஆட்டம் முடியும் போது பாடும்மீன் கழகம் 13—0 கோல்களால் எதிர்க் கோஷ்டியைத் தோற்கடித்தது.

யாழ். விளையாட்டரங்கில் நடைபெற்ற இப்போட்டிக்கு திரு. கிருஷ்ணன் மத்தியஸ்தம் வகித்தார்

(தே. றி)

## புதிய நிர்வாகிகள்

நெடுங்கேணி, செவ்.

வேலங்குளம் சனசமூக நிலைய பொதுக் கூட்டம் திரு. கு. ஐயம்பிள்ளை தலைமையில் நடைபெற்றபோது புதிய வருட நிர்வாகிகளாக கீழ்க்காணும்போர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: திரு. பொ. தங்கராசா உப தலைவர்: திரு. க. சிதம்பரநாதன் செயலாளர்: திரு சி. துரைராசசிங்கம் உபசெயலாளர்: திரு. சி. தங்கராசா பொருளாளர்: திரு. சு. தெய்வேந்திரம்பிள்ளை கணக்காளர்: திரு ச. சுப்பையா நாலு பேர் கொண்ட நிர்வாக சபையும் தெரிவு செய்யப்பட்டது.

0 0 0

யாழ்ப்பாணம், புதன்

புளியங்கூடல் மகாமாரி சனசமூக நிலையத்தின் வருடாந்த பொதுக்கூட்டம் நிலையத் தலைவர் திரு. செ. சிற்றம்பலம் தலைமையில் ஆரம்பமாகியது. கூட்டத்தில் கிராமத்தின் முக்கிய பிரச்னைகள் பற்றி பலர் உரையாற்றினர். பின்னர் நிலையத்தின் உத்தியோகத்தர் தெரிவு நடைபெற்றது. பின்வருவோர் நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: திரு. இ. பழனியப்பா, உபதலைவர்: கா. கிருஷ்ணபிள்ளை செயலாளர்கள் திரு. க. பாலகணபதி, கு. பாலசுப்பிரமணியம், பொருளாளர்: திரு. ந முத்துக்கிருஷ்ணன் 6 பேர் கொண்ட நிர்வாக சபையொன்றும் தெரிவு செய்யப்பட்டது.

0 0 0

அம்பன், செவ்

குடத்தனைக் கிராமசபைப் பகுதி அபிவிருத்திச்சபை நிர்வாகக்குழுத் தெரிவு குடத்தனை கிராமசபையில் வடமராட்சி வடக்குக் கிழக்குக் காரியாதிகாரி திரு மு தம்பிமுத்து தலைமையில் நடைபெற்றபோது பின்வருவோர் நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர்

தலைவர்: திரு மு கம்பிமுத்து. உபதலைவர் திரு வ துரையப்பா, கமத்தொழிற் பகுதி நிர்வாகக் குழுவினர்: திருவாளர்கள்: க க ஐயாத்துரை, சி செல்லத்துரை, எஸ் வல்லிபுரம், கைத்தொழிற் பகுதி ஏ வி பொன்னு, க சிவப்பிரகாசம், நீ யோ மரியாம்பிள்ளை.

## சினிமா விமர்சனம்

# வீட்டுக்கு வீடு

சகல வசதிகளையுமுடைய ஒரு இளம் குடும்பத்தில் ஒரு கணவன் தனது மனைவியை நாளாந்தம் துன்புறுத்தி, அடித்து, சித்திர வதை செய்கிறார். இரவுவிடுதிகளுக்குச் செல்லும் பழக்கத்தைக் கொண்ட கணவனாக வரும் முத்துராமன் தனது மனைவியை எந்நேரத்திலும் கொலைசெய்யும் நிலையிலிருக்கிறார். இந்நேரத்தில் பணக்காரக் குடும்பத்தில் பிறந்து தனது தந்தையாரின் விருப்பத்துக்கு மாறாக ஒரு பெண்ணை விவாகம் செய்துகொண்டு குடியிருக்க வசதியின்றி வீட்டுக்கு வீடு திரிந்து இருப்பிடம் தேடித் திரியும் ஜெய்சங்கரும் அவர் மனைவி லக்ஷ்மியும் முத்துராமனின் குடும்பத் தகராறில் தலையிட்டு, அவர்களை ஒற்றுமையாகவாழவைப்பதற்கு படாதபாடு படுகின்றனர்.

நாகேசுவும் வழமையான சேட்டைகளை இங்கும் விடத்தான் செய்கிறார். பாகவதராக வரும் நாகேசு பாகவதராக நடிப்பதற்கு உகந்தவராகத்தான் இருக்கிறார்

வீட்டுக்குவீடு படத்தில் ஜெய்சங்கரின் தகப்பனாராக சுந்தரராஜன் நடிக்கிறார். வி. கே. ராமசாமி, ராதிகா ஆகியோரும் சிறப்பாக நடித்துள்ள இப்படத்தை பிரபல டைரக்டரும் தயாரிப்பாளருமான ஸ்ரீதரின் சகோதரர் ஸி. வி. இராஜேந்திரன் டைரக்ட் செய்துள்ளார்.

தற்போது ராஜா திரையில் திரையிடப்பட்டிருக்கும் வீட்டுக்கு வீடு சலிப்பின்றி பார்க்கக்கூடிய முழுநீள சிறந்த ஹாஸ்ய சித்திரம். — காசி.

## கோப்பாய் பாடசாலைகள் உடற்பயிற்சி முடிவுகள்

உரும்பராய். செவ்.

கோப்பாய் வட்டார பாடசாலைகளிடையே நடைபெற்ற உடற்பயிற்சி போட்டி முடிவுகள் விபரம் வருமாறு போட்டிகள் கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் நடைபெற்றது

'ஏ' பிரிவு: 13 வயது பெண்கள்: உடும்பராய் இந்துக்கல்லூரி நீர்வலி அத்தியார் இந்துக்கல்லூரி 16-வயது பெண்கள்: உரும்பராய் இந்துக்கல்லூரி, நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி இருகல்லூரிகளும் மாவட்டப் போட்டிக்கு தெரிவுசெய்யப்பட்டன.

19-வயது பெண்கள்: கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி 13-வயது ஆண்கள்: நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி புத்தூர் சோமஸ்கந்தாக் கல்லூரி அச்சுவேலி கிறிஸ்தவகல்லூரி 16-வயது ஆண்கள்: உரும்பராய் இந்துக்கல்லூரி நீர்வேலி அத்தியார் இந்துக்கல்லூரி இரு கல்லூரிகளும் மாவட்டப் போட்டிக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளன 19 வயது ஆண்கள்: வசாவிளான் மத்திய மகாவித்தியாலயம்.

'பி' பிரிவு: 13-வயது பெண்கள்: அச்சுவேலி சென்திரேசா பாடசாலை உரும்பராய் சைவத்தமிழ் வித்தியாசாலை கோப்பாய் சரவணபவானந்தாவித்தியாசாலை 16-வயது பெண்கள்: அச்சுவேலி சென்திரேசா பாடசாலை உரும்பராய் சைவத்தமிழ் வித்தியாசாலை கோப்பாய் சரவணபவானந்தவித்தியாசாலை முதல் இருகல்லூரிகளும் மாவட்டப் போட்டிக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளன.

19 - வயது பெண்கள்: அச்சுவேலி சென்திரேசா பாடசாலை உரும்பராய் சைவத்தமிழ் வித்தியாசாலை கோப்பாய் சரவணபவானந்தா பாடசாலை 13-வயது ஆண்கள்; உரும்பராய் சைவத்தமிழ் வித்தியாசாலை 16-வயது ஆண்கள்: உரும்பராய் சைவத்தமிழ் வித்தியாசாலை 19-வயது ஆண்கள்: உரும்பராய் சைவத்தமிழ் வித்தியாசாலை.

— —

அல்லைப்பிட்டி, செவ்.

வேலணைப்பகுதி அபிவிருத்தி வேலைகளைக் கவனிப்பதற்கு ஒரு பொறியியலாளர் அலுவலக மொன்று வேலணையில் அண்மையில் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

## பாடசாலை உடற் பயிற்சிப் போட்டி

சுழிபுரம், செவ்

வட்டுக்கோட்டை வட்டாரப் பாடசாலைகளின் உடற்பயிற்சிப் போட்டி சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது. பதிதுக்கு மேற்பட்ட பாடசாலைகள் போட்டியில் பங்குபற்றி இறுதிப் போட்டிக்குத் தெரிவு செய்யப்பட்டன.

......

## பட்டதாரிகளை நியமியுங்கள்

உடும்பராய், செவ்.

வித்தியாபகுதியால் அனுமதிக்கப்பட்ட தமிழ் பாடசாலைகளுக்கு அம்மாணவர்களின் நலன்கருதி விஞ்ஞானம், கணிதம், ஆங்கிலம் ஆகிய பாடங்களில் விசேட பயிற்சி பெற்றவர்களையோ அல்லது பட்டதாரிகளையோ ஆசிரியர்களாக நியமிக்குக.

வலிகாமம் கிழக்கு தமிழாசிரியர் சங்கக்காரியதரிசி திரு. அ பஞ்சாட்சரம் மேற்கண்டவேண்டுகோளை வட பகுதிவித்தியாபகுதிக்கு விடுத்துள்ளார்

கோப்பாய் வட்டாரத்தில் முதலாம் வகுப்புத்தொடங்கி 10-ம்வகுப்புவரையில் இயங்கும் தமிழ்ப்பாடசாலைகள் ஏழு உள்ளன இப்பாடசாலைகள் அவ்வப்பகுதியில் உள்ள மாணவர்களுக்கு பெரிதும் தொண்டுசெய்து வருகின்றன, இப்பாடசாலைகளில் உள்ளமாணவர்களும் கணித விஞ்ஞானத்துறையில் உயர்ச்சிபெற கணித, விஞ்ஞான ஆசிரியர்களை நியமிப்பது அவசியம் என்றும் காலகதியில் ஆங்கிலத்தில் விசேடபயிற்சி பெற்ற ஆசிரியர்களை நியமிக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் அம்மகஜரில்மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

......

## பிரசங்கரத்நாகரம்

யாழ்ப்பாணம், புதன்

கோப்பாய் திருவருள் தவநெறிமன்றத்தில் தமக்களிக்கப்பட்ட பாராட்டின்போது பிரசங்கரத்நாகரம் என்னும் பட்டம் அளிக்கப்பட்டதாகவும், ஈழநாட்டில் வெளியானது போல சங்கீதரத்நாகரம் பட்டம் அளிக்கப்படவில்லை என்றும் இசைத்தமிழாசிரியர் திரு. கா. பொன்னம்பலம் தெரிவிக்கிறார்.

......

## புத்தகக்கடை ஊழியர் சம்பளம்

கோட்டை, செவ்.

புத்தகக்கடை ஊழியர்களின் வேதனங்களை நிர்ணயிக்க தொழிற் திணைக்களம் தீர்மானித்துள்ளது.

முதன் முதலாக கொழும்பில் உள்ள புத்தகக் கடை ஊழியர்களின் வேதனங்கள் நிர்ணயிக்கப்படவுள்ளன இதையடுத்து நாட்டின் இதரப் பகுதிகளிலும் உள்ள புத்தகக் கடைகளில் உள்ள ஊழியர்களின் வேதனங்கள் நிர்ணயிக்கப்படும் என தொழிற் திணைக்கள அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்

தொழில் அமைச்சின் இப்புதிய திட்டத்தால் ஆகக்குறைவான ஊதிய திட்டம் இல்லாதவர்கள் பெரும்பயனடைவார்கள்.

ஓர் இந்தியப் பிரயாணி

## 220 ருத் பொருட்களையே கொண்டு செல்லலாம்

கொழும்பு, செவ்.

இந்தியாவுக்குத் தலைமன்னார் மூலம் செல்லும் பிரயாணி ஒருவர் ஆகக் கூடியது 220 ருத்தல் நிறையுள்ள பொருட்களையே கொண்டு செல்லமுடியும் தலைமன்னாருக்கும் இராமேஸ்வரத்துக்கு மிடையே போக்குவரத்துக்கு விடப்பட்டிருக்கும் கப்பலில் ஒரு பிரயாணி இதற்கு மேல் கொண்டு செல்லமுடியாது இந்திய கப்பல் கூட்டுத்தாபனம் இம் முடிவைச் செய்துள்ளது.

இந்தக்கப்பலில் இந்தியர் கொண்டு செல்லும் பொருட்களுக்குக்கட்டணமாக 75 சதம் முதலாம் திகதியிலிருந்து நடைமுறைப்படுத்தப்படுகிறது.

......

## கச்சதீவு உற்சவம்

யாழ்ப்பாணம் புதன்

பாலைதீவு வருடாந்த உற்சவம் இம் மாதம் 11-ம் திகதி முதல் 16-ம் திகதி வரை நடைபெறும் கச்சதீவு உற்சவம் இம்மாதம் 18-ம் திகதி முதல் 21-ம் திகதிவரைநடைபெறும்.

இதற்கான போக்குவரத்து ஒழுங்குகளைக் கவனிப்பதில் அரசாங்க உயர் அதிகாரிகள்தற்போது துரிதமாக ஈடுபட்டுள்ளனர்

## விபத்தில் காயமுற்று

பருத்தித்துறை, செவ்

யாழ்ப்பாணத்தை நோக்கிச் சென்று கொண்டிருந்த காரும், பருத்தித்துறையை நோக்கி வந்துகொண்டிருந்த லொறியும் இருபாலையில் மோதியதன் விளைவாக கார் சாரதி படுகாயங்களுடன் யாழ்ப்பாணம் அரசினர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். பொலிசார் விசாரணை செய்கின்றனர்.

......

## புத்தூரில் திருட்டு

பருத்தித்துறை. செவ்

புத்தூர்ப் பகுதியில் தண்ணீர் பம்புகளும் அவற்றின் உதிரிப் பாகங்களும் பெருமளவாகத் திருட்டுப்போக ஆரம்பித்துள்ளன. இதனால் விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

......

## 36 பூட்டப்பிள்ளைகளைக் கண்டவர்

பருத்தித்துறை, செவ்

நேற்று முன்தினம் துன்னாலை தெற்கைச் சேர்ந்த எஸ். கயிலாயர் என்பவர் தமது 106-வது வயதிற் காலமானார். 26 பேரப்பிள்ளைகளையும், 36 பூட்டப்பிள்ளைகளையும் கண்ட இவர் தமது வாழ்நாளில் குடிமற்றும் புகைபிடிக்கும் பழக்கங்களை அறியாதவராம்.


கலாநிலைய

பற்றுச்சீட்டுப் புத்தகங்கள்

இரு கலரில் அழகிய முறையில் அச்சடித்த

(50 மூலப் பிரதிகளும், அதன் பிரதிகளும்)

பற்றுச்சீட்டுப் புத்தகங்கள்

எம்மிடம் குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம்.

ஒவ்வொரு 25 புத்தகங்களுக்கும் பற்றுச்சீட்டுப் புத்தகங்கள் வைத்து எழுதுவதற்கு அழகான

மட்டைக்கவர் இலவசமாகக் கொடுக்கப்படும்.

மேலும் விபரங்களுக்கு நேரில் எம்மிடம் தொடர்பு கொள்ளவும்.

"ஈழநாடு"

வர்த்தக அச்சகப்பகுதி

யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவிட்டபுரம் ஆலயப்பிரவேசவழக்கு

# "எந்தச் சமூகத்தவரும் உள்ளே செல்ல விடமாட்டேன்"

## ஆதீன கர்த்தா சாட்சியம்

யாழ்ப்பாணம், புதன் "மாவிட்டபுரம் கோவில் உட்பிரகாரத்திற்குள் சிறுபான்மை சமூகத்தவரை ஒரு காலமும் விடமாட்டேன். பெரும்பான்மை சமூகத்தவரையும் உள்ளேசெல்ல விடமாட்டேன். ஒப்பந்தத்தின் பின் எல்லாரும் வெளியில் நின்று வணங்கினார்கள் எனக்கு எல்லா மக்களும் சரிதான்."

மாவிட்டபுரம் கந்தசாமி கோவில் ஆலயப்பிரவேசம் சம்பந்தமான வழக்கில், ஆதீனகர்த்தா துரைசாமிக்குருக்கள் சாட்சியமளித்தபோது மேற்கண்டவாறு கூறினார்

இவ்வழக்கு யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றத்தில் நீதிபதி திரு ஏ வைத்திலிங்கம் முன்னிலையில் நேற்று நான்காவது தினமாக விசாரணைசெய்யப்பட்டது.

மாவிட்டபுரம் ஆலயத்திற்குள் செல்வோரை தடுக்கக்கூடாதென ஆதீனகர்த்தா துரைச்சாமிக்குருக்கள் திரு. வி. சுந்தரலிங்கம் ஆகியோர் மீது அட்டோர்னி ஜெனரல் இவ்வழக்கை தாக்கல்செய்துள்ளார்.

மனுதார் சார்பில் முடிக்குரிய வழக்கறிஞர் எல் டி குருசாமி, புறக்டர் எஸ் கனகரத்தினத்தின் அனுசரணையுடன் ஆஜரானார். எதிர் மனுதாரர்கள் சார்பில் அட்வக்கேட் வி. சுந்தரலிங்கம், அட்வக்கேட் ராஜராஜேஸ்வரன் தங்கராசாவின் உதவியுடனும் புறக்டர் ஏ உலகநாதனின் அனுசரணையுடனும் ஆஜரானார்.

ஆதீனகர்த்தா துரைசாமிக்குருக்கள் சாட்சியமளிக்கையில் மேலும் கூறியதாவது. 'தமிழ் அரசர்கள் ஆட்சிபுரிந்தபோது கோவில்கள் இங்கு கட்டப்பட்டது. போத்துக்கிசர் ஆட்சிப்பின்னர் குமாரசாமிக்குருக்கள், சபாபதிக்குருக்கள் ஆகியவர்கள் மாவிட்டபுரம் கோயிலை திரும்பவும் கட்டினார்கள்.

இக்கோவிலில் சலவை தொழிலாளர்கள், வெள்ளை கட்டவும், வேறு சில தொழிலுக்கும் அமர்த்தப்பட்டுள்ளனர். பரம்பரை பரம்பரையாக இவர்கள் இத்தொழிலை செய்துவருகின்றனர். இவர்களுக்கு சம்பளம் கொடுக்கப்படுவதில்லை. வேறு சலவை தொழிலாளர் வந்து இக்கோவிலில் அந்த வேலைகளைச் செய்யமுடியாது.

இக்கோவிலில் மேளகாரர்கள் இருக்கின்றார்கள். இவர்களுக்கும்சம்பளம் கொடுப்பதில்லை. பரம்பரையாக இத்தொழிலை செய்துவருகின்றனர். வேறு மேளகாரர்வந்து இந்தக் கோவிலில் வாசிக்க முடியாது இவர்கள் வேறு கோவிலுக்கு சென்று வாசிக்கலாம். இங்கு விசேஷ திருவிழா ஒன்று உண்டு. அதற்கு ஆறுமுகசுவாமி நடனம் என்று பெயர். இப்படியான திருவிழா வேறு கோவிலில் நடக்கக்கூடும் நான் பேரவில்லை.

### 68-ம் ஆண்டுவரை தொல்லையில்லை

1968-ம் ஆண்டுவரை கோவில் பூசைகளோ, திருவிழாக்களோ, ஒருவித மான தொந்தரவும் இல்லாமல் நடைபெற்றது. கோவில் விஷயமாக பிரதம மந்திரிக்கு ஒரு கடிதம் அனுப்பினேன். அக்கடிதத்தில் சிவ ஆகமமுறைப்படி இக்கோவிலில் எல்லாம் நடப்பதென்று தெரிவித்திருந்தேன் 20-6-68ல் இக்கடிதத்தை பிரதமருக்கு அனுப்பினேன்.

### பொலிஸ் அதிபரின் கூட்டம்

இந்தக் கடிதத்தை நான் பிரதமருக்கு எழுதமுன்பு ஒரு சம்பவம் நடந்தது வட பகுதி பொலிஸ் அதிபர் மாவிட்டபுரத்தில் ஒரு கூட்டத்தை கூட்டினார். நானும் அக்கூட்டத்திற்கு சென்றிருந்தேன். எல்லாருக்கும் அறிவித்து அக்கூட்டத்தை கூட்டினார். பொலிஸ் அதிபர் தான் தலைமைதாங்கினார், ஆலயப் பிரவேசத்திற்கு ஒழுங்கு செய்யும்படி பொலிஸ் அதிபர் கூறினார். அக்கூட்டத்தில் பெரும்பாலானோர் இதனை ஏற்கவில்லை பொலிஸ் அதிபர் உத்தியோக உடையில் அக்கூட்டத்திற்கு வந்திருந்தார் அவர் கையில் ஏதும் வைத்திருந்தாரா என்பதை நான் காணவில்லை. ஆலயப் பிர

(5-ம் பக்கம் பார்க்க)

## 'வடமராட்சியில் பசளைக் கிட்டங்கிவேண்டும்'

பருத்தித்துறை, செவ் நெற்காணி, விவசாயஉதவியாளையாளர் திரு ஐ கே வீரவர்த்தன இம்மாதம் 15ம் திகதி வடமராட்சி விவசாயக்குழுக்களின் மகாநாட்டிற் கலந்து கொள்ளும் போது கீழ்க்காணும் கோரிக்கைகள் அவரிடம் சமர்ப்பிக்கப்படவுள்ளன,

150 தொன்பசளைகொள்ளக் கூடிய மத்திய சாலை ஒன்று வடமராட்சிப் பகுதியில் நிறுவப்படவேண்டும். நெல்வயல்களுக்கு மட்டுமன்றி உபஉணவுப் பயிர்களுக்கும் பசளைவசதிகள் வழங்கப்படவேண்டும். அலைந்து திரியும் மிருகங்களிடமிருந்து பயிர்களைப் பாதுகாக்க ஒவ்வொரு குழுவிற்கும் அனுமதி பெற்ற துப்பாக்கிகள் வழங்கப்படவேண்டும். மற்றும் மாயக்கைக் கிணறு, தொண்டமானாறுக் கால்வாய் ஆகிய இடங்களிலுள்ளசேற்றை அகற்றல், 'கெருடாவில், ஊரிக்காடு, கம்பர்மலை, நெல்லியகூஆகிய பகுதிகளில் கிராமமின்வசதித் திட்டங்களை உருவாக்கல் தற்போழுதுள்ள நெற்காணி வரி ஏக்கர் ரூபா 6 ஆக இருப்பதை ரூபா 3 ஆகக் குறைத்தல், நெல்வயல்களுக்கும் மிளகாய், உருளைக்கிழங்கு போன்ற உபஉணவுப்பயிர்களுக்கும் மருந்தடிப்பதற்கான ஆட்களும், வசதிகளும் செய்தல்.

## மரண அறிவித்தல்

### திருமதி மார்க்கிரெட் கிருபைரத்தினம் சின்னத்துரை

அச்சுவேலியைச் சேர்ந்த கிறிஸ்தவ கல்லூரியின்ஓய்வு பெற்ற ஆசிரியை திருமதி மார்க்கிரட் கிருபைரத்தினம் சின்னத்துரை காலமாகிவிட்டார் இவர் காலஞ்சென்ற சின்னத்துரையின் அன்புமனைவியும் ரூய் காந்தராஜ் (ஆசிரியர்நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம்) நவரட்ணராஜ் கமலானந்தன். வேதராஜன் பல்கலைக்கழக மாணவி கமலாதேவி ஆகியோரின் தாயாரும் காலஞ்சென்ற ஆசிரியர் சீவரத்தினம், புறக்டர் குணரத்தினம் கூட்டுறவுப் பரிசோதகர் ராஜரத்தினம், தம்பிரத்தினம் (ஆசிரியர் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி) ஆகியோரின் சகோதரியுமாவார் அன்னாரின் பூதவுடல் இன்று (3-3-71) காலை பத்துமணியளவில் அச்சுவேலி சந்நிதிரோட் இல்லத்திலிருந்து வல்லை சேமக்காலைக்கு நல்லடக்கத்துக்காக எடுத்துச்சல்லப்படும், உறவினரும் நண்பர்களும் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும்.

2195

## தேவை

ஆங்கில அறிவுள்ள கஷியர் தேவை. நேரில் தொடர்புகொள்ளவும், ஸ்ருடியோ எலைற், யாழ்ப்பாணம்.

2201

## பாவனைப் பொருட்களுக்கு ஒரே விலை

கோட்டை, செவ். பொருட்களை தங்களிடம் வாங்குபவர்களுக்கு நாடு பூராவும் ஒரேவிதமான விலையைக் குறிக்க கூட்டுறவு மொத்த விற்பனை ஸ்தாபனம் தீர்மானித்துள்ளது.

தற்போது மாகாணங்களில் பாவனைப் பொருட்களின் விலை கொழும்பிலும் பார்க்க அதிகமாகவே உள்ளது.

மாகாணங்களில் பாவனைப் பொருட்களின் விலை கூட்டுறவு மொத்தவிற்பனை நிலையங்களில் அதிகமாக இருப்பதற்குக் காரணம் பொருட்களை கூ. மொ. வி நிலையத்தின் மத்திய ஸ்தாபனத்தில் இருந்து எடுத்துச்செல்வதனால் ஏற்படும் செலவாகும் என்றும் எதிர்காலத்தில் இந்த நிலைமை இருக்கமாட்டாது என்றும் கூறப்பட்டது. இனிமேல் மாவட்ட ரீதியில் கூ. மொ. வி. நிலையம் பொருட்களை விநியோகிக்கவுள்ளது" இதற்காக 25 மொத்த விற்பனை டிப்போக்களை அரசாங்கம் ஒவ்வொரு பிரிவிலும் அமைக்க நடவடிக்கைகள் எடுத்துள்ளது.

......

## இராமாயண விரிவுரை

தாவடி, செவ்வாய் தாவடி ஸ்ரீ கணேச வாசிகசாலை மண்டபத்தில், தாவடி சைவ இளைஞர் சங்கத்தின் சார்பில் "இராமாயண விரிவுரை" நடாத்தப் பட்டு வருகிறது. இளைப்பாறிய வங்கிப் பிரதமலிகிதர் திரு. எஸ். சின்னத்துரையின் தலைமையில் தினமும் இரவு 7 மணிக்கு இவ்விரிவுரை நடைபெறுகிறது.

## இராணுவம் தாக்கியதாம்

மாவிட்டபுரம், செவ். பலாலியில் இராணுவத்தினரின் அட்டகாசம் அதிகரித்துள்ளதாம் நேற்று இரவு பலாலியில் விவசாயியான சின்னர் இளையதம்பி என்ற வயோதிபர் தோட்ட வேலை முடிந்து இரவு வீடு திரும்பும் சமயம் இராணுவத்தினரால் பலாலி வீதியில் வைத்து தாக்கப்பட்டு அபாயகரமான நிலையில் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார் இது குறித்து காங்கேசன்துறை பொலிசில் செய்யப்பட்ட புகாரையடுத்து பொலிசார் புலன்விசாரணையில் ஈடுபட்டுள்ளனர்.

இதே போல இன்னும் பல தாக்குதல்கள் நடைபெறுவதாக புகார் செய்யப்படுகின்றன.

## பொலிஸ் வீதி விபத்து படக்காட்சி

சங்கானை, செவ். வடமாகாண பொலீஸ் அதிபர் திரு. இ. சுந்தரலிங்கம், பொலிஸ் பொது மக்கள் நல்லுறவு அதிகாரி திரு. ஆறுமுகம்இராசையா ஆகியோர் வடபகுதியில்முக்கிய கல்லூரிகளுக்குச் சென்று இளைஞர்கள் செய்து செய்துவரும் குற்றங்களையும் அவற்றால் அவர்களுக்குக் கிடைக்கக்கூடிய தண்டனைகளையும் அவைகளைத் தவிர்க்க வேண்டிய அவசியத்தையும் மாணவமாணவிகளுக்கு எடுத்துகூறிவருகின்றனர், வீதிகளில் கடைப்பிடிக்க வேண்டிய விதிமுறைகள் பற்றியும், பொலிசார் பொதுமக்கள் நல்லுறவுபற்றியும் இவர்கள் விரிவாக எடுத்து விளக்கிவருகின்றனர்.

இதன் ஓர் அங்கமாக படக்காட்சியையும் காட்டிவருகின்றனர். இம்மாதம் 12-ம் திகதி வலிமேற்குப் பகுதியில் படக்காட்சி காண்பிக்கப்படும். 12-ம் திகதி 10-30 மணிக்கு சங்கானை மணிமகால் தியேட்டரில் பாடசாலை மாணவிகட்கும் மாலை 6 மணிக்கு அராலி கிராமசபைக்கு அண்மையில் பொதுமக்களுக்கும் மாலை 8-30 மணிக்கு சித்தன்கேணி பிள்ளையார் வீதியில் பொதுமக்களுக்கும் படம் காண்பிக்கப்படவுள்ளது.

## பிரிட்டனில் தேநீர் குடிப்போர் அதிகரிப்பு

லண்டன், மார்ச் 2 பிரிட்டனில் தேநீர் பருகுவோர் தொகை அதிகரித்து வருகிறது. பொதுமக்களின் உணவுப் பாவனை சம்பந்தமாக பிரிட்டிஷ் விவசாய அமைச்சு மேற்கொண்ட மதிப்பீடுகளிலிருந்து இவ்வுண்மை புலனாகியுள்ளது.

இப்புள்ளி விபரங்களின் படி 1969-ம் ஆண்டு தலைக்கு 8.5 ருத்தல் தேயிலை பாவிக்கப்பட்டதென்றும், சென்ற ஆண்டு தலைக்கு 8.7 ருத்தல் தேயிலை பாவனையாகியுள்ளதென்றும் மதிப்பிடப்பட்டுள்ளது. 1958-ம் ஆண்டிலிருந்து வீழ்ச்சியடைந்துவந்த தேநீர் பருகுவோர் தொகை சென்ற ஆண்டிலேயே அதிகரிக்கத் தொடங்கியுள்ளது

இதேவேளை பிரிட்டனில் காப்பி குடிப்போர் தொகை குறைந்துவருகிறது. 1969ம் ஆண்டு தலைக்கு 3.6 ருத்தல் காப்பி பாவனையாகியதென்றும் சென்றாண்டுதலைக்கு3.5 ருத்தல் மட்டுமே பாவிக்கப்பட்டதென்றும் மதிப்பிடப்பட்டுள்ளது.

## இந்திய...

(1 ம் பக்கதொடர்ச்சி)

நாங்கள் வாழும் சிறிய நாட்டில் பிரிந்து வாழுவது சரியல்ல, ஒவ்வொருவரும் தமது சுற்றத்தை நேசிக்க வேண்டும் வகுப்புத் துவேசம்,இனக் குழப்பம் ஆகியவற்றுக்கு இத் நேரத்தில் இடமளிக்காது நேர்மையான சமூகத்தை அமைக்க வேண்டும்.

இலங்கையில் உணவு உற்பத்திக்கு கூடியஊக்கம் காட்டுபவர்கள் இங்குள்ள விவசாயிகள்தான். இவர்களுக்கு உணவு உற்பத்திக்கு நல்ல ஊக்கம் அளிக்கப்படுகிறது. மேலும் ஊக்கம் அளிக்கப்படும்' என்றார்

காங்கேசன்துறை எம் பி. எஸ் ஜே வி செல்வநாயகம் யாழ் அரசாங்க அதிபர் திரு விமல் அமரசேகரா உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு க நல்லைநாதன் உட்படப் பலர் பேசினர் வி கதிரவேலு நன்றி கூறினார். கலை நிகழ்ச்சிகளும் இடம் பெற்றன.

......

## பாடசாலைகளில் பல்சிகிச்சை சேவை

கோட்டை, செவ். நாட்டிலுள்ள ஒவ்வொரு மகாவித்தியாலத்திலும் பல் சிகிச்சை நிலையங்கள் அமைக்க சுகாதார அமைச்சின் 5 ஆண்டுத் திட்டத்தின் கீழ் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன?

அக்பீமனத் தொகுதியில் உள்ள அமரசூரிய மகாவித்தியாலயத்தில் பல்சிகிச்சை சேவையை ஆரம்பித்துவைத்துப் பேசுகையில்சுகாதார அமைச்சர் திரு. ஆரியதாசா மேற்கண்ட தகவலைத்தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தொடர்து பேசுகையில் கூறியதாவது: மாணவர்கள் பற்களைச் சுத்தமாக வைத்திருப்பதன் மூலம் தங்களுக்கு வரும் பல் வியாதிகளில் இருந்து தப்பித்துக் கொள்ளலாம். மாணவர்களின் சுகாதார தேவையைக் கருதியே சுகாதார அமைச்சு மேற்படி பல் வைத்திய சேவையை மாணவர்களுக்கு ஏற்படுத்தியுள்ளது.

மேலும்சுகாதாரஅமைச்சு தனது 5 ஆண்டு திட்டத்தின்கீழ் நாட்டின் சுகாதார சேவையை சீர் திருத்தி அதன்மூலம் மக்களின் சுகாதார தேவைகளைப் பூர்த்தி செய்யவுள்ளது

## மேலும் இருவர் தெரிவு

யாழ்ப்பாணம், புதன் வித்தியோதயப் பல்கலைக் கழகத்தில் ஆரம்பிக்கப்புதிதாகவட்ட வர்த்தகப் பட்டதாரிகள் வகுப்பிற்கு கொக்குவில் இந்துக்கல்லூரியில் இருந்து இவ்வருடம் மூன்று மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டு பயிற்சிபெறச் சென்றுள்ளனர். மு. சுந்தரலிங்கம் க. பரமேஸ்வரன் ஆகிய இருவரும் மேற்படி பல்கலைக்கழகத் துணைவேந்தரின் அவசர அழைப்பின் மூலம் தெரிவுசெய்யப்பட்டுப் பயிற்சிபெறச் செல்கின்றனர்.

.........

## இரட்டைக் கொலை; ஒருவர் சரண்

முல்லைத்தீவு, செவ் முல்லைத்தீவில் நடைபெற்ற இரட்டைக்கொலை சம்பந்தமாக சந்தேகநபரான ஆறுமுகம் கனகசிங்கம் என்பவர் முல்லைத்திவுப் பொலிசில் சரணடைந்துள்ளார்.

நேற்றுமுன்தினம் முல்லைத்திவு மேலதிக நீதிபதி ஜனாப் ஏ எம் ஐ சாகிப் ஸ்தலவிசாரணை நடத்திக் கொலை எனத் தீர்ப்பளித்தார்.

இப் பத்திரிகை "ஈழநாடு லிமிடெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் பிரவுன் கோவில் வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1971ம் ஆண்டு மார்ச் மாதம் 3-ந் திகதி வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org